

වාර්ෂික කාර්යසාධන වාර්තාව

வருடாந்த செயற்திறன் அறிக்கை

ANNUAL PERFORMANCE REPORT

2022

වාරිමාර්ග අමාත්‍යාංශය

நீர்ப்பாசன அமைச்சு

Ministry of Irrigation

2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

உள்ளடக்கம்

செலவினத் தலைப்பு இல *198* - நீர்ப்பாசனப் அமைச்சு

அத்தியாயம் *01*	நிறுவனத்தின் விவரம் /நிறைவேற்றுப் பொழிப்பு	*01*
அத்தியாயம் *02*	முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம்	*05*
அத்தியாயம் *03*	வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை	*75*
அத்தியாயம் *04*	செயலாற்றுகை சுட்டிகள்	*81*
அத்தியாயம் *05*	பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை *(SDG)* அடையும் செயலாற்றுகை	*82*
அத்தியாயம் *06*	மனித வள விபரம்	*85*
அத்தியாயம் *07*	இணக்க அறிக்கை	*86*

பின்னிணைப்பு

பின்னிணைப்பு *I*	முடிக்கப்பட்ட பயிற்சி நெறிகள் *(KITI)*
பின்னிணைப்பு *II*	நீர்ப்பாசன அமைச்சின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்கள்
பின்னிணைப்பு *III*	செயற்படும் நிறுவனத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்கள்
பின்னிணைப்பு *IV*	கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை *(நீர்ப்பாசனப் அமைச்சு)*

தலைப்பு - 198

நீர்ப்பாசன அமைச்சு

01 அத்தியாயம் - நிறுவன ரீதியான தோற்ற வடிவம் / செயற்படுத்துகை சுருக்கம்

1.1. அறிமுகம்

நீர்ப்பாசன அமைச்சுக்கு உரித்தான அனைத்து நிறுவனங்களினதும், நீர்ப்பாசன அமைச்சின் கீழ் இயங்கிய இராஜாங்க அமைச்சினதும் விடயப் பரப்புகள் உள்ளடங்களாக 2022 ஆம் ஆண்டில் தனியொரு அமைச்சாக இயங்கிய நீர்ப்பாசன அமைச்சு, இலங்கையின் நீர் வளங்களின் விருத்தி மற்றும் முகாமைத்துவம் தொடர்பாக மிக முக்கியமான செயற் பணிகளை முன்னெடுத்த வண்ணமுள்ளது.

விவசாய விருத்தி தொடர்பாக பாசன நீரை விநியோகித்த வண்ணம் முழு மொத்த விவசாயக் குடிகளினதும் வாழ்க்கைத் தர நிலைகளை மேம்படுத்தும் பொருட்டு நீர்ப்பாசன அமைச்சு தேவையான செயற் பணிகளை முன்னெடுத்த வண்ணமுள்ளது. மேற்குறித்த நோக்கத்துக்கு அப்பாற் பட்டதாக குடி நீர், கைத்தொழில் மற்றும் வலுச் சக்தி போன்ற பல் வகை நோக்கங்களை எய்தும் பொருட்டு நீர் வளங்களின் விருத்தி மற்றும் முகாமைத்துவம் தொடர்பாக நீர்ப்பாசன அமைச்சு மென் மேலும் தேவையான முயற்சிகளை முன்னெடுத்த வண்ணமுள்ளது.

அதனடிப்படையில், நடுத்தர மற்றும் பாரிய நீர்ப்பாசனப் பிரதேசங்களில் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ உட் பிரவேசிப்பின் ஊடாக விவசாயக் குடி மக்களை வலுவூட்டுவதற்கும், நிலக் கீழ் நீர் வளங்கள் விருத்தி மற்றும் முகாமைத்துவம் போன்ற விடயங்களின் வாயிலாக அதன் அளவியல் மற்றும் தராதர நிலையைப் பேணிய வண்ணமும் இயங்கும் பொருட்டும் நீர்ப்பாசன அமைச்சின் கீழ் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்பட்ட வண்ணமுள்ளன.

நீர்ப்பாசன அமைச்சுக்குக் கையளிக்கப்பட்டுள்ள செயற் பணிகளை முன்னெடுக்கையில் நீர்ப்பாசன திணைக்களம், இலங்கை மகாவலி அதிகார சபை மற்றும் நீர்ப்பாசன முகாமைத்துவப் பிரிவு போன்ற தரப்பினரிடமிருந்து கிடைக்கின்ற பங்களிப்பு மிக முக்கியத்துவமுள்ளதாகக் காணப்படுகின்றது.

1.2. *நிறுவனத்தின் தூரநோக்கு, குறிக்கோள்கள், பணிக்கூற்று*

1.2.1. *தூரநோக்கு*

"வினைத்திறனான நீர் வளங்களின் விருத்தி மற்றும் முகாமைத்துவத்தின் மூலம் செழிப்பான இலங்கையை உருவாக்குதல்"

1.2.2. *பணிக்கூற்று*

நீர் வளங்களின் விருத்தி மற்றும் முகாமைத்துவத்தின் மூலம் பல் நோக்குத் தேவைகளை நிவர்த்தி செய்த வண்ணம் குடிகளினதும், சூழலினதும் நிலைப்பாட்டை உறுதி செய்தல்

1.2.3. *குறிக்கோள்கள்*

i. நாட்டின் அனைத்து வகையான நீர்ப் பயன்பாடு மற்றும் வலுச் சக்தி தோற்றுவாய்க்குத் தேவையான நீர் வளத்தை விருத்தி செய்தல் மற்றும் முகாமைத்துவப்படுத்துதல்.

ii. காணி மற்றும் நீர் பயன்பாட்டை மேம்படுத்துதல்.

iii. ஆற்றுப் படுக்கைகளையும், நீர்த் தோற்றுவாய்களையும் பாதுகாப்பதன் மூலம் நீரின் தரத் தன்மையையும், பேண் தகு நிலையையும் பாதுகாத்தல்.

iv. இலங்கயின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு தேவையான பாசன நீர் மற்றும் விவசாயஞ் சார் மதியுறை சேவை வசதிகளை வழங்குதல்.

v. இலங்கையர் அனைவருக்கும் சுகாதார பாதுகாப்பு மிக்க குடியியல் நீர் வழங்கப்படுவதை உறுதிப்படுத்தும் நோக்கில் தேவையான வசதிகளை வழங்குதல்.

vi. சுற்றுச் சூழல் சம நிலைக்கும், மேம்பாட்டுக்கும் தேவையான நீர் வசதிகளை வழங்குதல்.

vii. நீர்ப்பாசனத் தொகுதிகளுடன் தொடர்புடைய விவசாயக் குடி மக்களினது வாழ்க்கை நிலைகளை மேம்படுத்துவதன் ஊடாக விவசாயத் துறையின் பேண்தகு நிலையை உறுதிப்படுத்துதல்.

viii. கைத்தொழில் துறை, சுற்றுலாத் துறை போன்ற சேவை பிரிவுகளின் நீர்த் தேவையை பூர்த்தி செய்தல்.

ix. இலங்கையில் நிலக் கீழ் நீர் வளங்கள் மேம்பாடு, பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம்.

x. மகாவலி விசேட பொருளாதார ஆளுகைப் பிரதேசத்தின் ஊடாக தேசிய உணவுற்பத்தி செயற்பாடு தொடர்பில் முனைப்பழிப்புள்ள பங்களிப்பை வழங்குதல்.

1.3. *பிரதான செயற்பாடுகள்*

i. அமைச்சு மற்றும் அமைச்சின் கீழான நிறுவனங்களின் விடயப் பரப்புகளுடன் தொடர்புடைய கொள்கை உறுவாக்கம், கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்

ii. நீர் வளங்கள் மற்றும் நீர்ப்பாசனத் தொகுதிகளின் விருத்தி

iii. முன்னெடுப்பு மற்றும் பராமரிப்பு செயற்பாடுகளும் உள்ளடங்களாக நீர்ப்பாசனத் தொகுதிகளையும், ஆற்றுப் படுக்கைகளையும் பாதுகாத்தல்.

iv. நீர்த் தோற்றுவாய்கள் மற்றும் நீர்ப்பாசனத் தொகுதிகளை பேணுதல் மற்றும் பாதுகாத்தல்

v. பல் வகை தேவைகளை பூர்த்தி செய்வதற்குத் தேவையான போதியளவான நீரை ஒதுக்கிடும் பொருட்டு தொழில்நுட்ப வழிகாட்டலையும், அளவுகோல்களையும் தயாரித்தல்.

vi. நீர்த் தோற்றுவாய்கள் மற்றும் தொடர்புடைய சுற்றாடல் மாசாக்கத்தை தடுப்பதற்கும், நீரின் தர நிலையை உறுதிப்படுத்தும் பொருட்டும் உபாய வழி நிகழ்ச்சித் திட்டங்களையும், கருத்திட்டங்களையும் செயற்படுத்துதல்.

vii. நிலத்தினுள் உவர் நீர் உட்புகுவதை தடுக்கும் பொருட்டு நிகழ்ச்சித் திட்டங்களையும், கருத்திட்டங்களையும் செயற்படுத்துதல்

viii. கழிவு நீர் மற்றும் வெள்ளப் பெருக்கு பாதுகாப்பு

ix. பொறியியல் சார் மதியுறை சேவைகளை வழங்குதல்.

x. அரச பிரிவிற்குறிய பிரதானமான நிர்மாணிப்பு சேவை வழங்குநராக தராதர மிக்க நிர்மாணிப்புப் பணிகளில் ஈடுபடுதல்.


xi. நீர்ப்பாசனத் தொகுதிகளின் நிறுவன ரீதியான அபிவிருத்தி மற்றும் வினைத் திறனை மேம்படுத்துகை.

xii. நிலக் கீழ் நீர் மேம்பாட்டு கண்காணிப்பு மற்றும் முகாமைத்துவம்.

xiii. மழை நீர் சேகரிப்பு மழை நீர் சேகரிப்பை விருத்தி செய்வதற்குத் தேவையான நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதல்.

xiv. தேசிய மின் வழங்கல் செயற்பாட்டின் பிரதானமான புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி வழங்குநராக மகாவலி நீர்த்தேக்கத் தொகுதிகளை முகாமைத்துவப்படுத்துதல்.

1.4. நிறுவன விளக்கப்படம்



1.5. *அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்*

- *நீர்ப்பாசன திணைக்களம்*

1.6. *அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் / நிதியங்கள்*

- நீர்ப்பாசனத் திணைக்களம் (ID)
- இலங்கை மகாவலி அதிகார சபை (MASL)
- நீர்ப்பாசன முகாமைத்துவப் பிரிவு (IMD)
- மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம் (CECB)
- இலங்கை பொறியியல் பேரவை (CESL)
- கொத்மலை சர்வதேச பயிற்சி நிறுவனம் (KITI)
- இலங்கை பொறியியல் சபை (ECSL)
- மகாவலி மதியுறை பணியகம் (MCB)

1.7. வெளி நாட்டு நிதியங்கள் பெறப்படுகின்ற கருத்திட்டங்களின் *தகவல்கள்*

அ) கருத்திட்டத்தின் பெயர்	ஆ) பங்களிப்பு முகவர் நிறுவனம்	இ) கருத்திட்டத்தின் மதிப்பீட்டு செலவினம் (ரூபா. மில்லியன்)	ஈ) கருத்திட்ட காலப்பகுதி
மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சி (MWSIP)	ADB	160,356 (Revised) (USD 675 Mn)	2015 – 2024
உமா ஓய பல் நோக்கு அபிவிருத்தி கருத்திட்டம்	EDB/ GOSL	89,800 (USD 514.06 Mn+98,361.70RsMn)	2010 மார்ச் – 2023 ஜூன்
மொரகஹகந்த மற்றும் களு கங்கை நீர்த்தேக்க கருத்திட்டம்	CDB, SFD, KFAED, OFID, GOSL	117,700 (USD 770.41 Mn)	2007 – 2023 மார்ச்
கால நிலை தாக்கங்களை தணிக்கும் பல கட்ட நிகழ்ச்சித் திட்டம் (CResMPA)	WB - IBRD	16,750 (USD 93.00 Mn)	2021 - 2028 6 years
நிலக் கீழ் நீர் கண்காணிப்பு வலையமைப்பொன்றை நிலை நாட்டும் கருத்திட்டம்	GOSL (Netherlands)	5,613.00 (20.63 Euro Mn)	2018 மார்ச் – 2022 டிசம்பர்
நீர் முகாமைத்துவத்துக்கான ஒருங்கிணைந்த பிரவேசிப்பின் ஊடாக கால நிலை ஏற்றத் தாழ்வுகளை முகாமைத்துவப்படுத்துதல் (வெவ்கம் புபுதுவ - CRIWMP)	Green Climate Fund & GOSL	9,114 (USD 52.08 Mn)	2017 - 2024
ஒருங்கிணைந்த நீரேந்து மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவக் கருத்திட்டம் (IWWRMP)	WB	14,199.43 (USD 45.03 Mn)	2021 - 2026

02 அத்தியாயம் - விருத்தி மற்றும் எதிர்க்கால நோக்குகை

2.1. விசேட அடைவுகள், சவால்கள் மற்றும் எதிர் வரும் இலக்குகள்

2.1.1. விசேட விடயங்கள்

பேண் தகு நீர் வளங்கள் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவத்தின் ஊடாக சுபீட்சம் மிக்க இலங்கையை உறுவமைக்கும் தூர நோக்குடன் கூடியதான நீர்ப்பாசன அமைச்சு நீர் வளங்கள் மேம்பாடு மற்றும் முகாமைத்துவத்தின் ஊடாக பல் நோக்கு தேவைகளைப் பூர்த்தி செய்த வண்ணம் குடிகளினதும், சுற்றாடலினதும் நிலைப்பாட்டை உறுதிப்படுத்தும் பொருட்டு தொடர்ச்சியாகத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்த வண்ணமுள்ளது. நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் இலங்கை மகாவலி அதிகார சபையின் ஊடாக நாடு முழுதும் பரம்பியுள்ள குளங்கள் மற்றும் நீர்ப்பாசனத் தொகுதிகளின் இயங்கு நிலை, பராமரிப்பு மற்றும் பாதுகாப்புக்கு மேலதிகமாக நீர்ப்பாசன அபிவிருத்திக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாது நீர்ப்பாசனத் தொகுதிகளை விஸ்தரிக்கும் பணிகளும் நீர்ப்பாசன அமைச்சுக்குக் கையளிக்கப்படுகின்றது. எனினும், தேசியத் தேவையான குடி நீர் மற்றும் நீர் மின் வலு உற்பத்தி போன்ற பல் வகைத் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதும் நோக்கங்களாகக் காணப்படுகின்றன.

பல்வேறுபட்ட இடர்ப்பாட்டு நிலைக்கு மத்தியிலும் 2022 ஆம் ஆண்டு காலப் பகுதி, நீர்ப்பாசன அமைச்சு குறித்தொதுக்கப்பட்ட பல இலக்குகளை வெற்றிகரமாக எய்திய வருடமென அடையாளம் காணலாம். உமா ஒய பல் நோக்கு அபிவிருத்திக் கருத்திட்டத்தின் பணிகளில் 97% ஆன பணிகள் இன்றளவிலும் நிறைவடைந்திருப்பதுடன், 2023 ஆம் ஆண்டின் நடுப் பகுதியில் கருத்திட்டத்தின் பணிகளை நிறைவு செய்வதற்குத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

2022 ஆம் ஆண்டில் இலங்கை அரசினதும், பிரான்ஸ் அபிவிருத்தி முகவராண்மை நிறுவனத்தின் நிதியங்களின் கீழும் செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள முந்தெனி ஆற்றுப் படுக்கை அபிவிருத்திக் கருத்திட்டத்திற்கான கடன் உடன் படிக்கையை கைச்சாடிடுவதற்குத் தேவையான ஆயத்தங்கள், 2022 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டன. இன்றளவிலும் ஒப்பந்தக்காரர்களினால் கும்புக்கன் ஒய நீர்த்தேக்கக் கருத்திட்டத்தின் நிர்மாணிப்புப் பணிகளை ஆரம்பிக்கும் பொருட்டு 2021 ஆம் ஆண்டில் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு, அப் பேச்சு வார்த்தைகள் 2022 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டு, தேவையான பின்னாய்வுப் பணிகளுக்கென நிதி அமைச்சுக்கு முன் வைக்கப்பட்டுள்ளன. இக் கருத்திட்டத்தின் நிர்மாணிப்புப் பணிகளை துரிதமாக ஆரம்பிப்பதற்கு நீர்ப்பாசன அமைச்சு எதிர்ப்பார்த்துள்ளது.

மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் (MWSIP), ஒருங்கிணைந்த நீர் போசாக்கு மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவக் கருத்திட்டம் (IWWRMP) மற்றும் கால நிலை மாற்றங்களுக்கு முகங் கொடுக்கின்ற பல நோக்கு நிகழ்ச்சித் திட்டப் பிரவேசிப்பு (CResMPA) போன்ற கருத்திட்டங்கள் தொடர்பாக ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கியுடன் கலந்தாலோசித்து மீள் நிலைப்படுத்துவதற்குத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் (MWSIP) மீள் நிர்மாணிக்கப்பட்ட நிதியங்களின் ஊடாக கிட்டத்தட்ட அமெரிக்க டொலர் 40 மில்லியன் நிதி செலவிடப்பட்டு இலங்கைக்கென மியுரேட் ஒப் பொட்டேஷ் (MOP) 40,000 மெட்ரிக் தொன்னை பெறுகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான பங்களிப்பை நீர்ப்பாசன அமைச்சு வழங்கியுள்ளது.

மொரகஹகந்த நீர்த்தேக்கத்தின் நிர்மாணிப்புப் பணிகளுக்குப் பிற்பாடு மகாவலி தொகுதியின் மேலதிக நீரை மின்னேரிய நீர்த்தேக்கத்திற்குத் திசை திருப்புதல் மற்றும் நீர்த்தேக்கத்தின் நீர் மட்டத்தை நீண்ட காலப் பகுதிக்கு அதி கூடிய மட்டத்தில் நிலையாகப் பேணுவதற்கு நடவடிக்கை எடுப்பதன் ஊடாக யானைகளினால் ஏற்படக் கூடிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் நீர்ப்பாசன அமைச்சு பெருமளவில் பங்களிப்பை வழங்கியுள்ளது.

இலங்கை மகாவலி அதிகார சபையினால் 2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நாட்டில் நிலவுகின்ற மின்சார நெருக்கடிக்குத் தேவையான நீர் மின் வலுத் தோற்றுவாய்க்கு அவசியமான நீரை சிறந்த வகையில் முகாமைத்துவ செயன் முறைகளின் ஊடாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நீர்ப்பாசன கட்டளைச் சட்டத்தை திருத்துதல், நீர்ப்பாசன ஒதுக்கீட்டு எல்லைகளையும், வெள்ளப் பெருக்கு அனர்த்த முகாமைத்துவப் புதிய சட்டத்தையும் நிலை நாட்டுவதற்குத் தேவையான சிபாரிசுகளை முன் வைக்கும் பொருட்டு நீர்ப்பாசன அமைச்சினால் குழுவொன்று நியமிக்கப்பட்டது. அதன் பிரகாரம், குழுவின் சிபாரிசுகளுக்கு அமைய நீர்ப்பாசனத் தொகுதிகளையும், இயற்கை நீரேந்துகளையும் ஒதுக்கிடும் வரையறைகளுக்கு இசைவாக வர்த்தமானி அறிவிப்பை முடியுரிமை காணிக் கட்டளை சட்டத்தின் கீழ் பிரகடப்படுத்தும் பொருட்டு காணி அமைச்சுக்கு முன் வைக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் புதிதாக வெள்ளப் பெருக்கு அனர்த்த முகாமைத்துவ சட்டத்தை வரைவு படுத்துவதற்குத் தேவையான அனுமதியை, அமைச்சரவை சட்ட வரைஞருக்கு வழங்கியுள்ளது.

நீர்ப்பாசன அமைச்சின் கீழ் செயற்படக் கூடிய முக்கியமான கருத்திட்டங்களின் விருத்தி தொடர்பான விபரங்களை கீழேயுள்ளவாறு சுருக்கிக் குறிக்கலாம்.

1. மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம்

மதிப்பீட்டு பணத் தொகை	ரூபா 160,356 மில்லியன் (US$ 976 Mn)	**பலனடையும் மாவட்டங்கள்**	மாத்தளை, கண்டி, குருணாகலை, அனுராதபுரம், பொலன்னருவை
நிதி வசதிகள் வழங்கப்படும் முறை	ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கை அரசு	**நீர்த்தேக்கத்தின் கொள்திறன்**	**வட மத்திய மாகாண பிரதான கால்வாய் திட்டம்** - மில்லியன் கன மீற்றர் 191 **வடமேல் மாகாண பிரதான கால்வாய் திட்டம்** - ஹெக்டயார் 13,000 **வட மத்திய மாகாண பிரதான கால்வாய் திட்டம்** - ஹெக்டயார் 12,300 மினிபே இடக் கரை கால்வாய் மறு சீரமைப்பு கருத்திட்டம் - ஹெக்டயார் 7,500
கருத்திட்ட காலப் பகுதி	2015 - 2024	**பலனடைவோர்**	<u>கட்டம் 1</u> வட மேல் மாகாண கால்வாய்க் கருத்திட்டம் - 300,000 **வட மத்திய மாகாண பிரதான கால்வாய்** கருத்திட்டம் - 700,000 மினிபே இடக் கரை கால்வாய் மறு சீரமைப்பு கருத்திட்டம் - 62,000
நிதி ஏற்பாடுகள் 2022	ரூபா 38,000 மில்லியன்	**2023 க்கான நிதி ஏற்பாடுகள்**	ரூபா 43,000 மில்லியன்
முழு மொத்த நிதி விருத்தி	ரூபா 68,286.34 மில்லியன்	**முழு மொத்த பௌதீக விருத்தி (%)**	35.4%

2022 ஆம் ஆண்டில் நிதி விருத்தி	ரூபா 32,016.34மில்லியன்
2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகள்	**நிர்மாணிப்புப் ஒப்பந்தத் தொகுதிகளின் நடப்பு நிலை** • வேமெடிள்ள இடக் கரை தலைமைக் கால்வாயை நெபடகஹவத்த வரை (0 + 000 கிலோ மீற்றரிலிருந்து 5 + 250 வரை) மேம்படுத்துகை மற்றும் புதிய கலிங்கல் மற்றும் NWPC-NCB-1 முடுவுறுக் கால்வாயின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளன. • 2022/23 பெரும் போகத்திற்கென 41,800 மெட்ரிக் தொன் எம்ஓபீ உரத்தை விவசாயிகளிடையே பகிர்ந்தளித்தல் - பகிர்ந்தளிப்புச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன. • 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு செயற்படு கருத்திட்ட ஒப்பந்த வகுதிகளின் பௌதீக விருத்தி பின்வருமாறு ➢ இடக் கரை மற்றும் வலக் கரை கால்வாய்களின் அளவீட்டுப் பணிகள் மற்றும் நீர்க் கட்டுப்பாட்டுக் கட்டுமானங்களுடன் கூடியதாக மினிப்பே அணைக்கட்டின் உயரத்தை மேலுயர்த்துதல். **(MLBCRP-ICB-1) - 10%** ➢ நெபடகஹவத்தவிலிருந்து மஹ கிதுல நீர்த்தேக்க உட் பிரவேசிப்பு சுரங்கம் வரையான தலைமைக் கால்வாயின் நிர்மாணிப்பு (5 + 250 கிலோ மீற்றரிலிருந்து 22 + 300 கிலோ மீற்றர் வரை) **(NWPC-ICB-2) - 15%** ➢ மஹகிதுல உட் பிரவேசிப்பு சுரங்கத்தின் நிர்மாணிப்பு, மஹகிதுல மற்றும் மஹகிருல நீர்த்தேக்கங்கள், மஹகிதுலவிலிருந்து மஹகிருல நீர்த்தேக்கம் வரையான ஊட்டக் கால்வாயின் நிர்மாணிப்பு **(NWPC-ICB-1)- 1.26%** ➢ மேல் எலஹெர கால்வாயின் நிர்மாணிப்பு, திறந்த நீர்க் குழாய் கால்வாய்களுடன் கூட்டிணைந்த 8 கிலோ மீற்றர் நீளமான இரண்டு சுரங்கங்களை உள்ளடக்கிய களு கங்கை - மொரகஹகந்த மாற்றீட்டுக் கால்வாயின் (KMTC) (0 + 100 கிலோ மீற்றரிலிருந்து 08 + 830 கிலோ மீற்றர் வரை) நிர்மாணிப்பு **(UEC-ICB-2B) - 12%** ➢ 27 + 509 கிலோ மீற்றரிலிருந்து 55 + 600 கிலோ மீற்றர் வரையான மேல் எலஹெர கால்வாயின் நிர்மாணிப்பு **(UEC-ICB-2A) - 5%**
கருத்திட்டத்தை செயற்படுத்துவதன் வாயிலாக கிடைக்கின்ற முழு மொத்த விருத்தி	• மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கட்டம் 1 இன் நிறைவின் போது கிட்டத்தட்ட 185,000 குடும்பங்களுக்கு குடி நீர்த் தேவை பூர்த்தி செய்யப்படும் (NWPCP - 35,000 குடும்பங்கள், NCPCP - 150,000 குடும்பங்கள்) • மேற்குறித்த அடிப்படையில் குடி நீரை விநியோகிப்பதன் வாயிலாக சிறு நீரகப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்

	• மேல் நீரேந்து கலஞ்சியப்படுத்துகை தொடர்பாகக் கண்காணிக்கும் பொருட்டு மினிபே தலைமைப் பணி அணையை 3.5 மீற்றரினால் மேலுயர்த்துவதன் ஊடாக பொதுவே உள் நுழைவை மேற் கொண்டு வருடாந்தம் 9 கிகா வொட் வலுச் சக்தியை தோற்றுவித்தல் • வட மேல் மாகாண கால்வாய் கருத்திட்டம் நிறைவடைந்த பிற்பாடு விவசாயச் செயற்பாடுகளின் பொருட்டு பிரதேசத்தில் அமைந்துள்ள ஏழு தலைமைக் குளங்களுக்கும், 350 சிறு குளங்களுக்கும் நீரை விநியோகித்தல் • 2022/23 பெரும் போகப் பருவத்தில் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளவுள்ள, பலனடையக் கூடிய விவசாயிகளுக்கு 41,800 மெட்ரிக் தொன் மியுரியேட் ஒப் பொட்டாஷ் (MOP) இனைப் பகிர்ந்தளித்தல் • மகாவலி தொகுதி பீ. சீ. டீ மற்றும் ஜீ பிரதேசங்களில் ஏனைய திடல் பயிர்ச் செய்கை (மிளகாய், சோயா விதை, சோளம், பெரிய வெங்காயம்) விஸ்தரிப்பு மற்றும் முட்டை உற்பத்தி) - பல தரப்பு கால்வாய் செயற் திட்டத்தின் கீழ் வருடாந்தம் 1000 கிலோ கிராம் மிளகாய் விதைகளை உற்பத்தி செய்து, 2,500 ஹெக்டயார் வணிக நிலப் பகுதியில் பயிர்ச் செய்கையை முன்னெடுப்பதற்கு உதவுதல். - மழை நீர்க் குடியியல் செயற் திட்டத்தின் கீழ் வருடாந்தம் 9,000 கிலோ கிராம் பெரிய வெங்காய விதைகளை உற்பத்தி செய்து, 1,000 ஹெக்டயார் வணிக நிலப் பகுதியில் பயிர்ச் செய்கையை முன்னெடுப்பதற்கு உதவுதல். - திறன் மிக்க விவசாய செயற்பாட்டுத் தொகுதியின் கீழ் வருடாந்தம் 200 மெட்ரிக் தொன் உலர் மிளகாய், 240 மெட்ரிக் தொன் சோயா, உற்பத்தி, 9360 மெட்ரிக் தொன் சோளம் மற்றும் 2,000 மெட்ரிக் தொன் பெரிய வெங்காயம் ஆகிய பயிர்களின் உற்பத்தி - ஒரு தொகுதிக்கு 15 மில்லியன் முட்டைகள் எனும் அடிப்படையில் முட்டை உற்பத்தி (80 வார காலப் பகுதி) • கருத்திட்டப் பிரதேசத்திலும், அதனைச் சூழவுள்ள பிரதேசத்திலும் சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு அரசினால் அனுமதிக்கப்பட்ட கவர்ச்சி மிக்க மற்றும் நியாயமான நட்ட ஈட்டுக் கொடுப்பனவு வகுதிகளை வழங்கியதன் வாயிலாகக் குடி மக்கள் பலனடைந்தனர். அதன் பலனாக இது வரை கருத்திட்டத்தின் கீழ் பாதிப்புக்குள்ளான 646 நபர்களுக்கு ரூபா 660 மில்லியன் நட்ட ஈட்டுக் கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளது. • கருத்திட்டத்தை முனைப்புடன் செயற்படுத்துகையில் சுற்றுச் சூழலுக்கு ஏற்படக் கூடிய அழிவுகளைக் குறைக்கும் பொருட்டு

	600 ஹெக்டயார் நிலப் பரப்பை மீள் வன வளர்ப்பிற்கென பயன்படுத்துவதற்கு எதிர்ப்பார்க்கப்படுவதுடன், இற்றை வரை 145 ஹெக்டயார் நிலப் பரப்பில் வன வளர்ப்புப் பயிரிடல் செயற்பாடுகள் நிறைவடைந்துள்ளன. • கால்வாய்த் தொகுதியின் ஊடான பிரவேசிப்புப் பாதையை விருத்தி செய்தல் • கால நிலை மாற்றங்கள் காரணமாக ஏற்படக் கூடிய விகாரங்களைக் குறைத்தல். • கருத்திட்டப் பிரதேசத்தில் நிலக் கீழ் நீரை விருத்தி செய்தல் மற்றும் வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கையை ஊக்குவித்தல் • நன்னீர் மீன் பிடித் துறையை விருத்தி செய்தல் மற்றும் சுற்றாடல் நேயமிக்க சுற்றுலாப் பயணத் துறையை விருத்தி செய்தல் • நிர்மாணிப்புப் பணிகள் காரணமாக பிரதேசக் குடி மக்களுக்குப் புதிதாக தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்படுதல்.

2. உமா ஒய பல் நோக்கு அபிவிருத்தி கருத்திட்டம்

மதிப்பீட்டு பணத் தொகை	ரூபா 80,447 மில்லியன்	**பலனடையும் மாவட்டங்கள்**	பதுளை, மொனராகலை, அம்பாந்தோட்டை
நிதி வசதிகள் வழங்கப்படும் முறை	இலங்கை அரசு மற்றும் ஈரானிய பொருளாதார அபிவிருத்தி வங்கி (EDBI)	**நீர்த்தேக்கத்தின் கொள்திறன்**	• புஹுல்பொல - மில்லியன் கன மீற்றர் 0.6 • டயரபா - மில்லியன் கன மீற்றர் 0.9 • **தற்போதுள்ள நிலத்தில்** 1,500 ஹெக்டயார் • **மற்றும் புதிதாக முன்னேற்றப்பட்ட நிலம்** 4,500 ஹெக்டயார் • **என மொத்தம் பயிர் நிலம்** 6,000 **ஹெக்டயார்களாகும்**
கருத்திட்ட காலப் பகுதி	**முதல் நிலை பணிகள்** - 2010 மார்ச் – 2023 ஜூன்	**பலனடைவோர்**	நேரடியாக கிட்டத்தட்ட 6,000 குடும்பங்கள் பலனடைவதுடன், கருத்திட்டம் முற்று முழுதாக நிறைவடைந்த பிற்பாடு தோற்றுவிக்கப்படுகின்ற மின்சாரத்தின் மூலம் அனைத்து குடி மக்களுக்கும் பலன் கிடைக்கும்.
நிதி ஏற்பாடுகள் 2022	ரூபா 4,200 மில்லியன்	**2023 க்கான நிதி ஏற்பாடுகள்**	ரூபா 3,600 மில்லியன் **(முதல் நிலை பணிகள்)**
முழு மொத்த நிதி விருத்தி	ரூபா 77,578.99 மில்லியன்	**முழு மொத்த பௌதீக விருத்தி (%)**	97.39%

2022 ஆம் ஆண்டில் நிதி விருத்தி	ரூபா 4,007.86 மில்லியன்
2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகள்	**தலைமைப் பணிகள்** • பூஹல்பொல அணைக்கட்டு - 99.37% • டயரபா அணைக்கட்டு - 95.37% • இணைப்புச் சுரங்கம் - 99.16% • தலைமையுருச் சுரங்கம் - 98.88% • நிலை குத்துத் தாங்கி - 96.87% • செங்குத்து அமுக்கத் தண்டு - 99.02% • வலு நிலையம் - 96.25% • பிரதான பிரவேசிப்பு சுரங்கம் மற்றும் ஏனைய பிரவேசிப்பு சுரங்கம் - 98.30% • ஸ்விட்ச் யார்ட் - 95.50% • பாதைகள் – 89.25% • குறுக்கீட்டு இணைப்பு - 97.50% • முடிவுருச் சுரங்கம் - 99.39%
கருத்திட்டத்தை செயற்படுத்துவதன் வாயிலாக கிடைக்கின்ற முழு மொத்த விருத்தி	• உமா ஓய படுக்கையின் நீர்ப் பயன்பாட்டிற்கும், சுற்றுச் சூழலுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில், தென் கீழ் உலர் வலயத்தின் நீர்த் தட்டுப்பட்டிற்குத் தீர்வாக உமா ஓய படுக்கையிலிருந்து கிரிந்தி ஓய படுக்கை வரை குறுக்கு மாற்றீட்டின் ஊடாக 145 மில்லியன் கன மீற்றர் கொள்ளளவுள்ள நீரை திசை திருப்புதல் உமா ஓய பல் நோக்கு அபிவிருத்திக் கருத்திட்டத்தின் (UOMDP) பிரதானமான நோக்கமாகக் காணப்படுகின்றது. • இதன் வாயிலாக மொனராகலை மாவட்டத்தின் கிட்டத்தட்ட 4500 ஹெக்டயார் புதிய நிலப் பகுதிகளுக்கு நீர்ப்பாசன வசதிகளை வழங்குவதற்கும், மொனராகலை மற்றும் அம்பாந்தோட்டை பிரதேசங்களில் தற்சமயம் 1500 ஹெக்டயார் நிலங்களுக்கு குடி நீர் மற்றும் கைத்தொழில் தேவைகளுக்கென 30 மில்லியன் கன மீற்றர் கொள்ளளவுள்ள நீரை விநியோகிப்பதற்கும் எதிர்ப்பார்க்கப்படுகின்றது. மொரனாகலை மாவட்டத்தில் வெள்ளவாய மற்றும் தனமல்வில ஆகிய பிரதேசங்களுக்கு அளிகொட்ட ஆற நீர்த்தேக்கத்தின் ஊடாக குடி நீ விநியோகிக்கப்படும். • மேலும் பதுளை மாவட்டத்தின் பண்டாரவெல, அட்டம்பிட்டிய ஆகிய பிரதேசங்களின் நீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு பூஹல் பொல மற்றும் டயரபா ஆகிய நீர்த்தேக்கங்களிளிருந்து தேசிய நீர் வழங்கள் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு 9 மில்லியன் கன மீற்றர் கொள்ளளவுள்ள நீர் வருடாந்தம் விநியோகிக்கப்படுகின்றது. • 120 மெகா வொட் கொள்ளளவுள்ள நிலக் கீழ் நீர் மின் வலு நிலையத்தின் நிர்மாணிப்பு காரணமாக வருடாந்தம் கிட்டத்தட்ட 290 கிகா வொட் மின் வலு தேசிய மின் வலுத் தொகுதிக்கு ஒன்று சேர்க்கப்படும

3. மொரகஹகந்த களு கங்கை நீர்த்தேக்க கருத்திட்டம்

கருத்திட்டத்தின் மொத்த முதலீடு	ரூபா. 117,700 மில்லியன்	பலனடையும் மாவட்டங்கள்	அனுராதபுரம், பொலன்னருவை, திருகோணமலை, மாத்தளை குருணாகலை
நிதி வசதிகள் வழங்கப்படும் முறை	CDB, SFD, KFAED, OFID & GOSL	நீர்த்தேக்கத்தின் கொள்திறன்	மொரகஹகந்த - 570 மில்லியன் கன மீற்றர் களு கங்கை - 250 மில்லியன் கன மீற்றர்
கருத்திட்ட காலப் பகுதி	2007 – 2023 மார்ச்	பலனடைவோர்	களு கங்கை - 3,419 மெதிரிகிரிய - 650
2022 க்கான நிதி ஏற்பாடுகள்	ரூபா 4,220.00 மில்லியன்	2023 க்கான நிதி ஏற்பாடுகள்	ரூபா 2,250.00 மில்லியன்
முழு மொத்த நிதி விருத்தி	ரூபா 117,115.55 மில்லியன்	முழு மொத்த பௌதீக விருத்தி (%)	99.37%
2022 ஆம் ஆண்டில் நிதி விருத்தி	ரூபா 3,667.00 மில்லியன்		
2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகள்	➢ காணி சுவீகரிப்பு மற்றும் மீள் குடியேற்றம் • லக்கல, பல்லேகம மற்றும் நாவுல பிரதேசங்களில் நட்ட ஈட்டுக் கோரிக்கை மற்றும் இழப்பீடு வழங்குதல் தொடர்பான விசாரணை • எலஹெர மற்றும் கந்தளாய் ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில், பிரிவு 10(i) இன் கீழ் உரிமை கோருவதுடன் தொடர்புடைய விசாரணைகளை முன்னெடுத்தல் மற்றும் அறிவித்தல்களை வழங்குதல் • லக்கல, பல்லேகம, கந்தளாய் மற்றும் மெதிரிகிரியா ஆகிய பிரதேசங்களில் பிரிவு 38 இன் கீழ் காணிகளை கையகப்படுத்துதல் ➢ தாழ் ஊற்று விருத்தி • பகிர்ந்தளிப்புக் கால்வாய் மற்றும் திடல் கால்வாய்களை நிர்மாணித்தல் • ரிவர்ஸ்டனில் உள்ள வன சீவராசிகள் ஒதுக்கீட்டின் பாதை நிர்மாணிப்பு மற்றும் கட்டிடத்தின் கட்டுமானம் • மொரகஹகந்த முகாம் மற்றும் ரஜவெல சுத்திகரிப்பு நிலையத்தின் நிர்மாணிப்பு • சந்தை விற்பனை நிலைய பாதைகளின் நிர்மாணிப்பு • யானைகளை விரட்டியடிக்கும் செயற்பாடுகள் • "குருவெல ஜல புபுல" நீர் விநியோகிப்புத் திட்டத்தை நிர்மாணித்தல் மற்றும் மொரகஹகந்த முகாமிற்கான நீர் விநியோகிப்புத் தொட்டிகளை நிர்மாணித்தல்		
கருத்திட்டத்தை செயற்படுத்துவதன் வாயிலாக கிடைக்கின்ற முழு மொத்த விருத்தி	• வருடாந்தம் 557 மில்லியன கன மீற்றர் நீர்க் கொள்ளளவுள்ள மொரகஹகந்த நீர்த்தேக்கம் • வருடாந்தம் 248 மில்லியன கன மீற்றர் நீர்க் கொள்ளளவுள்ள களுகங்கை நீர்த்தேக்கம் • வருடாந்தம் 114.5 கிகா வொட் மின் நீர் மின் வலுத்		

	தொகுதியின் வாயிலாகத் தோற்றுவிக்கப்படுகின்றது. நீரியல் மின் வலுத் தோற்றுவாயின் ஊடாக வருடாந்தம் ரூபா 1,545 மில்லியன் எரிபொருள் சேமிப்பு இடம் பெறுகின்றது. • பொதுப் பயன்பாட்டிற்கென 465 கட்டிடங்கள் • 276 கிலோ மீற்றர் நீளமான பாதை வலையமைப்பு • 330 கிலோ மீற்றர் நீளமான கால்வாய் வலையமைப்பு • 11 சிறு குளங்கள் கட்டுவிக்கப்பட்டுள்ளன • 20 நடுத்தரக் குளங்கள் கட்டுவிக்கப்பட்டுள்ளன • **மேலதிகமாக 5000 ஹெக்டயார் நிலப் பகுதி பயிர்ச் செய்கைக்கென விடுவிக்கப்பட்டன.** • **நாட்டின் விவசாய உற்பத்தி மேம்பாடு -** பல பிரதேசங்களின் பயிர்ச் செறிவு 100% முதல் 154% ஆகக் காணப்படுகின்றது. இக் கருத்திட்டத்தின் வாயிலாக பயிர்ச் செறிவை சராசரியாக 181% ஆக விருத்தி செய்வதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றது. மேலதிக விவசாயப் பலனாக வருடாந்தம் நெற் பயிர் விளைச்சலை 123,000 மெட்ரிக் தொன்களாக விருத்தி செய்வதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றது. நிகர வருடாந்த விவசாயப் பலன் நாணயப் பெறுமதியில் ரூபா 4,000 மில்லியனாகக் காணப்படுகின்றது. • **குடி நீர் மற்றும் தொழிற் துறை நீரை விநியோகிப்பு** - மாத்தளை, பொலன்னறுவை, அனுராதபுரம் மற்றும் திருகோணமலை மாவட்டங்களுக்கு இவ் வசதி வழங்கப்படும். • **நன்னீர் மீன் பிடி -** இதன் கீழான மதிப்பீடு செய்யப்பட்ட வருடாந்த உற்பத்தித் திறன் 4,700 தொன்களாகக் காணப்படுவதுடன், வருடாந்தம் அண்ணளவாக ரூபா 940 மில்லியன் நிகர வருமானத்தை உள்ளடக்கியுள்ளது. • **தொழில் வாய்ப்புகளை விருத்தி செய்தல் -** கருத்திட்டத்தின் கீழ் நேரடியாக 650 குடி மக்கள் புதிதாகத் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பு காணப்படுகின்றது. மேலும், இரத்தினக் கல் மற்றும் தங்காபரண பாட நெறிகள், ஹோட்டல் முகாமைத்துவ பாட நெறிகள், சுய தொழில் பயிற்றுவிப்புகள் போன்ற விடயங்களின் கீழ் இளம் தலைமுறையினரை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டன. • சுற்றாடல் நேயமிக்க சுற்றுலாத் துறையை மேம்படுத்துதல் - வஸ்கமுவ தேசிய சரணாலயம், மின்னேரியா தேசிய பூங்கா மற்றும் ரிவர்ஸ்டன் பிரதேசத்தை விருத்தி செய்வதன் ஊடாக சுற்றாடல் நேயமிக்க சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது • **வெள்ளப் பெருக்குக் கட்டுப்பாடு -** சோமாவதி மற்றும் மனம்பிட்டிய பிரதேசங்களில் வெள்ளப் பெருக்கு நிலை காரணமாக ஏற்படக் கூடிய அழிவுகளைக் கட்டுப்படுத்துதல்ள.

4. கால நிலை தாக்கங்களை தணிக்கும் பல கட்ட நிகழ்ச்சித் திட்டம் (CResMPA)

கருத்திட்டத்தின் மொத்த முதலீடு	ரூபா 16,750 மில்லியன்	**பலனடையும் மாவட்டங்கள்**	கொழும்பு, கம்பஹா, கேகாலை
நிதி வசதிகள் வழங்கப்படும் முறை	உலக வங்கியின் கடன் வசதிகள்	**நீர்த்தேக்கத்தின் கொள்திறன்**	45 மில்லியன் கன மீற்றர் (நிர்மாணிப்பதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்ற வீ ஓய பல் நோக்கு நீர்த்தேக்கதின் பிரதானமான நீர்ப்பாசனங்கள் மற்றும் மத்திய நிலையிலான நீர்ப்பாசன தொகுதிகளைச் சேர்ந்த கால்வாய்கள் மற்றும் நிர்மாணிப்புகளை மறு சீரமைப்பதன் மூலம்) 15,000 ஹெக்டயார்
கருத்திட்ட காலப் பகுதி	2021-2026	**பலனடைவோர்**	• கால நிலை மற்றும் வெள்ளப் பெருக்கு அனர்த்த முன் எச்சரிக்கை மேம்பாட்டின் ஊடாக 3.5 மில்லியன் குடி மக்களை பாதுகாக்கக் கூடிய வாய்ப்பு கிடைத்தல். • களனி ஆற்றுப் படுக்கையின் வெள்ளப் பெருக்கு மற்றும் கால நிலைத் தாக்கங்களுக்கு முகங் கொடுக்கக் கூடிய திறனை மேம்படுத்தும் பொருட்டு பல் நோக்கு நீர் உட்கட்டமைப்பு வசதிகளின் கீழ் 1,800,000 குடி மக்களுக்கு பலன் கிடைத்தல்.
2022 க்கான நிதி ஏற்பாடுகள்	ரூபா 1,500.00 மில்லியன்	**2023 க்கான நிதி ஏற்பாடுகள்**	ரூபா 2,025 மில்லியன்
முழு மொத்த நிதி விருத்தி	ரூபா 76.70 மில்லியன்	**முழு மொத்த பௌதீக விருத்தி (%)**	4.6 %
2022 ஆம் ஆண்டில் நிதி விருத்தி	ரூபா 58.60 மில்லியன்		
2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகள்	• வீ ஓய பல் நோக்கு நீர்த்தேக்கம் தொடர்பாக விபரமான திட்டங்கள், விலை மதிப்பீடுகள் மற்றும் விலை மனு ஆவணங்களை விருத்தி செய்யும் பொருட்டு மதியுரையாளரொருவரை நியமிப்பதற்கான RFP வெளியிடுவதற்கென விருப்பு கோரும் (EOI) செயற்பாடுகளும், குறுகிய பட்டியலிடுகை செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன. • நீர்ப்பாசன தினைக்களத்திற்குத் தேவையான தகவல் தொழில்நுட்ப உபகரணங்களையும், ஆய்வு கூட உபகரணங்களையும் பெற்றுக் கொள்ளும் பொருட்டு விலை மனுக்கள் கோரப்பட்டு ஒப்பந்தத்தைக் கையளிக்கும் செயற்பாடுகள் ஆயத்தம் செய்யப்பட்டுள்ளன. • நீர்ப்பாசன திணைக்களத்தின் நீரியல் பிரிவின் செயற்படுத்துகை		

	அறையைத் திட்டமிடும் பொருட்டு தனப்பட்ட தகவல் தொழில்நுட்ப மதியுரையாளரொருவரை இணைப்பு செய்வதற்கான விலை மனுக்களை பரீட்சிக்கும் செயற்பாடு நிறைவடைந்து பேச்சு வார்த்தைகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன. • வளி மண்டலவியல் திணைக்களத்தின் நீரியல் - வானிலை வலையமைப்பைப் புதுப்பிக்கும் பொருட்டு திட்டமிடல், விவரக் குறிப்பு மற்றும் விலை மனு ஆவணங்களை விருத்தி செய்வதற்கு மதியுறை நிறுவனமொன்றை வாடகைக்கு பெற்றுக் கொள்ளும் பொருட்டு நீர் வழங்கல் சபையிடமிருந்து கருத்துக்களை பெற்றுக் கொண்ட பிற்பாடு அதனை விரிவுபடுத்தி பிரகடனப்படுத்துவதற்குத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன • இலங்கை வானிலைத் தகவல் வலையமைப்பை (SLWIN) மேம்படுத்துவதன் வாயிலாக தரவுப் பரிமாற்றம் மற்றும் தாக்கங்களின் அடிப்படையிலான அனர்த்த முன்னெச்சரிக்கை தொடர்பான பொது மேடையோன்றைக் கட்டியெழுப்பும் பொருட்டு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப மதியுரையாளர்களை இணைப்பு செய்வதற்கு திட்ட விவரக் குறிப்பை தயாரிக்கும் செயற்பாடுகள் நிறைவடைந்துள்ளன. • சுற்றாடல் மற்றும் சமூகப் பாதுகாப்பு முகாமைத்துவ திட்ட வரையறை (ESSFW) கருத்திட்டத்தின் தலையீட்டின் கீழ் விருத்தி செய்யப்பட்டதுடன், ESSFW உடன் கூட்டிணைந்து குடி மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் பொறி முறை விருத்தி செய்யப்பட்டது. • பணி மனைக்குத் தேவையான பெருமளவான ஊழியர்கள் இணைப்பு செய்யப்பட்ட பிற்பாடு கருத்திட்ட ஒருங்கிணைப்பு அலகு நிலை நாட்டப்பட்டது. • தலைமை மற்றும் நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் அனர்த்த நிலைக்கு உள்ளாகக் கூடிய குடி மக்களுக்குத் துரித மற்றும் விரைவான பலன்கள் கிடைக்கப் பெறுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு கருத்திட்டத்தின் கீழான செயற்பாடுகளை மீள் கட்டமைத்து விடயப் பரப்பை மீள் நிலைப்படுத்தும் பிரேரணை தயாரிக்கப்பட்டது
கருத்திட்டத்தை செயற்படுத்துவதன் வாயிலாக கிடைக்கின்ற முழு மொத்த விருத்தி	• மேம்படுத்தப்பட்ட வானிலை மற்றும் வெள்ளப் பெருக்கு அனர்த்த முன் எச்சரிக்கை நடவடிக்கைகளின் ஊடாக 3.5 மில்லியன் குடி மக்களை பாதுகாக்கும் பொருட்டு, 1,800,000 நபர்களுக்கு பலன்கள் செய்து கொடுக்கப்பட்டன. • வெள்ளப் பேருக்கு மற்றும் கால நிலை மாற்றங்களுக்கு முகங் கொடுக்கக் கூடிய திறன் தொடர்பான பல் நோக்கு உட்கட்டமைப்பு வசதிகள் • களனி ஆற்றுப் படுக்கையின் சாதாரண வருடாந்த வெள்ளப் பெருக்குப் பாதிப்பை அமெரிக்க டொலர் 78 மில்லியன் வரை குறைத்தல். • 35,000 குடும்பங்களின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு வெள்ளப் பெருக்கு மற்றும் வரட்சியிலிருந்து, 25,000 பாசனக் காணிகள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

5. வினைத்திறனை மேலுயர்த்தும் மற்றும் நீர்ப்பாசன தொகுதிகளின் திறனை மேம்படுத்தும் கருத்திட்டம் (PEISEIP)

கருத்திட்டத்தின் மொத்த முதலீடு	ரூபா 18,500	பலனடையும் மாவட்டங்கள்	அம்பாறை, அனுராதபுரம், பதுளை, மட்டக்களப்பு, கொழும்பு, காலி, கம்பஹா, அம்பாந்தோட்டை, கண்டி, மாத்தறை, குருணாகலை, மன்னார், மாத்தளை, மொனராகலை, புத்தளம், நுவரெலியா, பொலன்னருவை, வவுனியா, இரத்தினபுரி, திருகோணமலை
நிதி வசதிகள் வழங்கப்படும் முறை	இலங்கை அரசு	நீர்த்தேக்கத்தின் கொள்திறன்	கருத்திட்டத்தின் விடயப் பரப்பு : கருத்திட்டத்தின் 04 ஆம் உள்ளடக்கங்களாவன, 1. நீர்ப்பாசன தொகுதி மறு சீரமைப்பு உள்ளடக்கம் (IIRC) 2. பண்ணை விருத்தி உள்ளடக்கம் (OFDC) 3. விவசாய வினைத் திறனை மேலுயர்த்தும் உள்ளடக்கம் (APIC) 4. நீர்ப்பாசன முகாமைத்துவத்துக்கான திறன் மற்றும் கொள் திறனை மேலுயர்த்தும் உள்ளடக்கம் (ICTMC) ஆகியவற்றின் மூலம் ஏற்படுத்தப்படுகின்ற நிலத்தின் வினைத் திறன், நீரின் வினைத் திறன் மற்றும் பயிர்களின் விலைச்சலை அதிகரித்தல் பாரியளவான 40 நீர்ப்பாசன கருத்திட்டங்களினதும், 40 நடுத்தர அளவிலான நீர்ப்பாசன தொகுதிகளினதும் வினைத் திறனையும், விலைச்சலையும் மேலுயர்த்துவதன் வாயிலாக விவசாயக் குடிகளது வருமானத்தை அதிகரிப்பதற்கும், இதன் வாயிலாக கருத்திட்ட பிரதேசத்தில் வசிக்கக் கூடிய குடி மக்களது வாழ்க்கைத் தரத்தை மேலுயர்த்துவதற்கும் கருத்திட்டத்தின் கீழ் எதிர்ப்பார்க்கப்படுகின்றது.
கருத்திட்ட காலப் பகுதி	2017 - 2022	பலனடைவோர்	98,000
2022 க்கான நிதி ஏற்பாடுகள்	ரூபா 100.00 மில்லியன்	2023 க்கான நிதி ஏற்பாடுகள்	திட்டம் 2022 இன் இறுதியில் மூடப்பட்டது
முழு மொத்த நிதி விருத்தி	ரூபா. 1,706.81 மில்லியன்	முழு மொத்த பௌதீக விருத்தி (%)	13.16%
2022 ஆம் ஆண்டில் நிதி விருத்தி	ரூபா. 78.66 மில்லியன்		

2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகள்	நீர்ப்பாசன உட்கட்டமைப்பு வசதிகளை மறு சீரமைத்தல் மற்றும் வயல் நிலங்களைத் தொடர்ச்சியாக மேம்படுத்தும் மற்றும் விவசாயிகளின் பொருளாதாரத் திறன்களை மேம்படுத்துதல் கருத்திட்டத்தின் கீழான நோக்கங்களாகக் காணப்படுகின்றன. அம்பாறை, அனுராதபுரம், பதுளை, மட்டக்களப்பு, கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை, கண்டி, குருணாகலை, மொனராகலை, பொலன்னறுவை, புத்தளம், திருகோணமலை மற்றும் மன்னார் ஆகிய பிரதேசங்களில் தரமுயர்ந்த விதை நெல்லையும், சேதன உரத்தையும் உற்பத்தி செய்வதும் முக்கியமான நோக்கங்களாகக் காணப்படுகின்றன.
கருத்திட்டத்தை செயற்படுத்துவதன் வாயிலாக கிடைக்கின்ற முழு மொத்த விருத்தி	• 72,882 ஹெக்டயார் பாசன நிலப் பகுதிக்கு நீர்ப்பாசன உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதன் வாயிலாக 97,832 குடும்பங்களுக்கு பாசன வசதிகளை விருத்தி செய்தல் • 110 கிலோ மீற்றர் நீளமான பிரதான கால்வாய்கள், 280 கிலோ மீற்றர் நீளமான பகிர்ந்தளிப்புக் கால்வாய்கள் மற்றும் 280 கிலோ மீற்றர் நீளமான திடல் காய்வாய்களுக்கு விருத்தி செய்யப்பட்ட கால்வாய்த் தொகுதிகளை மேம்படுத்துதல் • மதகுகள் மற்றும் சிறு பாலங்களின் நிர்மாணிப்புகள் உள்ளடங்களாக கருத்திட்டப் பிரதேசங்களினுள் 320 கிலோ மீற்றர் நீளமான மேம்படுத்தப்பட்ட பண்ணை வீதிகளை நிர்மாணித்தல். • ஏற்கனவே காணப்படுகின்ற நீர்ப்பாசனத் திட்டங்களின் பயிர்ச் செறிவை 1.5 / 1.8 இலிருந்து 2.0 வரை விருத்தி செய்வதன் ஊடாக கிட்டத்தட்ட 98,000 விவசாயக் குடும்பங்களின் வருமானமீட்டலை அதிகரித்தல் • தலைமை மற்றும் நடுத்தர அளவிலான 80 நீர்ப்பாசன சிபாரிசுத் திட்டங்களின் தரவு உருவாக்க அலகுகளைத் தம்மகத்தே கொண்ட அளவீட்டு உபகரணங்களையும், தொடர்பாடல் உபகரணங்களையும் உள்ளடக்கிய போக்குவரத்து அளவீட்டு வலையமைப்பு நிலை நாட்டுதல். 25 பிரேரணைத் திட்டங்களுடன் தொடர்புடைய GIS வரை படங்களையும், 02 பண்ணைச் சந்தைகளையும், மேம்படுத்தப்பட்ட சாகுபடி நிலங்களையும், களஞ்சியப்படுத்துகை நிலையங்களையும் விருத்தி செய்தல்.

6. நீர் முகாமைத்துவக் கருத்திட்டத்திற்கென ஒருங்கிணைந்த உட் பிரவேசிப்பின் ஊடாக உலர் வலயத்தின் சிறு தோட்ட உரிமையாளர்கள் கால நிலை மாறுபாடுகள் மற்றும் எதிர்ப்பாராத அனர்த்தங்களுக்கு முகங் கொடுக்கும் திறனை மேம்படுத்துதல் (CRIWMP)

கருத்திட்டத்தின் மொத்த முதலீடு	9,114.00 (ரூபா 175 = அமெரிக்க டொலர்)	பலனடையும் மாவட்டங்கள்	அனுராதபுரம், குருணாகலை, புத்தளம், பொலன்னருவை, திருகோணமலை, வவுனியா மற்றும் மன்னார்
நிதி வசதிகள் வழங்கப்படும் முறை	பாசுமை கால நிலை நிதியம் மற்றும் இலங்கை அரசு	நீர்த்தேக்கத்தின் கொள்திறன்	சிறு நீர்ப்பாசன தொகுதிகள் 325 ஹெக்டயார் 5,000

கருத்திட்ட காலப் பகுதி	2017 ஜூன் - 2024 ஜூன்	பலனடைவோர்	1,950,374
2022 க்கான நிதி ஏற்பாடுகள்	ரூபா 2,050.00 மில்லியன்	2023 க்கான நிதி ஏற்பாடுகள்	ரூபா 2,930.00 மில்லியன்
முழு மொத்த நிதி விருத்தி	ரூபா 5,603.00 மில்லியன்	முழு மொத்த பௌதீக விருத்தி (%)	58.00%
2022 ஆம் ஆண்டில் நிதி விருத்தி	ரூபா 1,187.00 மில்லியன்		
2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகள்	• 33 கிராமிய நீர்ப்பாசனத் தொகுதிகளின் / சிறு குளங்கள் (VIS) ஆகியவற்றின் மேல் நீரேந்து விருத்திப் பணிகளின் ஆரம்பிப்பு (விருத்தி 45%) • 27 VIS களுடன் தொடர்புடைய மேல் நீரேந்து விருத்திப் பணிகள் நிறைவடைந்துள்ளன. • 16 VIS களுடன் தொடர்புடைய நில அளவைப் பணிகள் நிறைவடைந்துள்ளன - சின்னக் குஞ்சிக் குளம் அடுக்கடுக்கான குளத் தொகுதி • 167 VIS களுக்கு செயற்படுத்துகை மற்றும் பராமரிப்பு உபகரணங்களை வழங்குதல் மற்றும் விவசாயிகளை செயற்படுத்துகை மற்றும் பராமரிப்பு செயற்பாடுகள் தொடர்பாகப் பயிற்றுவித்தல் • 35 கமநல சேவைகள் நிலையங்களை உள் நாட்டு அறிவூட்டல் நிலையங்களாக வலுப்படுத்துதல் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உபகரணங்களை பெற்றுக் கொடுப்பதன் வாயிலாக) • விவசாயத் தொடர்பாடல் மதியுறை பகிர்ந்தளிப்பு - 459204 விவசாயிகள் • நாட்டினுள் தோற்றம் பெற்றுள்ள உணவுத் தட்டுப்பாட்டைத் தீர்க்கும் பொருட்டு மிக முக்கியமான துரித விவசாய நிகழ்ச்சித் திட்டம் (07 மாவட்டங்களில்) ○ 1820 ஏக்கர் பிற திடல் பயிர்ச் செய்கை ○ 400 வீட்டுத் தோட்டங்களை வலுவூட்டுதல் ○ 94 கோழிப் பண்ணை அலகுகளை நிலை நாட்டுதல் • மழை நீர் விளைச்சலை அறுவடை செய்வதுடன் தொடர்புடையதாக 381 வீட்டுத் தோட்டங்களை செயற்படுத்துதல் - 59835 பழ மரக் கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்ட • 12 கிராமிய நீர்ப்பாசனத் தொகுதிகளில் நீரியல் வளர்ப்பு நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதல் மற்றும் 42 கிராமிய நீர்ப்பாசனத் தொகுதிகளுடன் தொடர்புடைய நீரியல் வளர்ப்பு நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்தல் • தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையுடன் கூட்டிணைந்து குழாய்களைப் பொருத்தும் 12 உப கருத்திட்டங்களை ஆரம்பித்தல்		

	• 973 மழை நீர் அறுவடை அலகுகளைத் தாபித்தல் • குறிப்பு : வெளி நாட்டு நிதியங்கள் 2022 நவம்பர் மாத இறுதியிலிருந்து பெறப்பட்ட வண்ணமுள்ளன. • விவசாய அறுவடை உபகரணங்கள் இன்றளவிலும் நிலை நாட்டப்பட்டிருப்பதுடன், அவை நிலை நாட்டப்பட்டுள்ள இடங்களிலிருந்து நீர் முகாமைத்துவ மதியுறைத் தகவல்களை ஒன்று திரட்டும் மற்றும் பகிர்ந்தளிக்கும் செயன் முறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
கருத்திட்டத்தை செயற்படுத்துவதன் வாயிலாக கிடைக்கின்ற முழு மொத்த விருத்தி	• நன்னெறி மிக்க காலநிலை விவசாய செயன் முறைகளின் ஊடாக 325 VIS களின் பயிர்ச் செறிவை 0.8 இலிருந்து 1.6 வரை அதிகரித்தல் • 11 கிராமிய நீர் வழங்கல் பிரேரிப்புத் திட்டங்களும், 125 நீர் சுத்திகரிப்பு நிலைய அலகுகளும், 4000 மழை நீர் ஒன்று திரட்டு தாங்கித் தொகுதிகளும் நிலை நாட்டப்பட்டதன் வாயிலாக அனர்த்தத்துக்கு உள்ளாகக் கூடிய குடிமக்களுக்கு வருடம் முழுதும் பாதுகாப்பு மிக்க குடி நீரை விநியோகிக்கும் பொருட்டு கால நிலை மாற்றங்களுக்கு முகங் கொடுக்கக் கூடிய நடுத்தர அளவிலான நீர் முகாமைத்துவத் தீர்வுகளை விருத்தி செய்தல் • வினைத் திறன் மிக்க கண்காணிப்புத் தொகுதியை நிலை நாட்டுதல், கால நிலை மதியுரைப் பகிர்ந்தளிப்பு மற்றும் முன் அனர்த்த எச்சரிக்கைத் தொகுதி மற்றும் அனர்த்தத்துக்கு முகங் கொடுக்கக் கூடிய செயன் முறைகள் தொடர்பான நடவடிக்கைகளை விருத்தி செய்வதன் ஊடாக வெள்ளப் பேருக்கு மற்றும் வரட்சி நிலைக்கு முகங் கொடுக்கக் கூடிய குடி மக்களின் நீர் முகாமைத்துவ மற்றும் இயைபாக்கத் திறனை மேலுயர்த்துதல்.

7. தல்பிட்டிகல நீர்த்தேக்க கருத்திட்டம்

கருத்திட்டத்தின் மொத்த முதலீடு	ரூபா 31,494 மில்லியன்	பலனடையும் மாவட்டங்கள்	பதுளை, கண்டி
நிதியங்கள் வழங்கப்படுகின்ற முறைகள்	இலங்கை அரசு	நீர்த்தேக்கத்தின் கொள்திறன்	மில்லியன் கன மீற்றர் 15.6 தற்போதை ஹெக்டயார் 810 நவீன ஹெக்டயார் 400 மினிபே இடது வங்கி வணிகத்தில் 8000 ஹென்டேயர்கள் பகுதியளவு
கருத்திட்டத்தின் காலப் பகுதி	2021-2025	பலனடைவோர்	10,000 குடும்பங்கள்
2022 க்கான நிதி ஏற்பாடுகள்	ரூபா. 350.00 மில்லியன்	2023 க்கான நிதி ஏற்பாடுகள்	ரூபா. 500.00 மில்லியன்*
முழு மொத்த நிதி விருத்தி	ரூபா. 585.31 மில்லியன்	முழு மொத்த பௌதீக நிதி விருத்தி (%)	14%

2022 ஆம் ஆண்டில் நிதி விருத்தி	ரூபா. 197.22 மில்லியன்
2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகள்	• காணி சுவீகரிப்பு • வலக் கரை பக்கப் பாதை நிர்மாணிப்பு • உமா ஓயவுடன் தொடர்புடைய பாலத்தின் பொருத்துகை • மீள் வன வளர்ப்பை ஆரம்பித்தல் • நில அளவீடு விசாரணை மற்றும் விபரமான திட்டமிடல்
கருத்திட்டத்தை செயற்படுத்துவதன் வாயிலாகன் கிடைக்கக் கூடிய முழு மொத்த பலன்கள்	• உமா ஓயாவின் நீரை கிரிந்தி ஓயவிற்கு திசை திருப்புவதன் ஊடாக நீர் பற்றாக்குறையினால் பாதிக்கப்பட்டு விவசாய நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாத இரண்டு பயிர் பருவங்களுக்கும், பத்மெடில்ல மற்றும் மினிபே இடக் கரை உள்ளடங்களாக 400 ஹெக்டயார் நிலப் பகுதிக்கும் நீரை விநியோகித்தல், • நீர் மின் உற்பத்தியின் மூலம் தேசிய மின் வலுத் தொகுதிக்கு ஆண்டுதோறும் 51.3 கிகா வோட மணித்தியாலம் மின்சாரத்தை ஒன்று சேர்த்தல் • குடிநீர் விநியோகம் • மீன் பிடித் துறையை மேம்படுத்துதல் • ஊவ பரனகமவில் இருந்து கந்தேகெட்டிய வரையான அணைக்கட்டின் ஊடாக பாதையை நிர்மாணித்தன் மூலம் பயணத் தூரம் 70 கிலோ மீற்றரினால் குறைவடையும். • சுற்றுலாத் துறையின் வளர்ச்சி • மகாவலி திட்டங்களில் வண்டல் படிவதைக் கட்டுப்படுத்துதல்.

*தேசிய செயல்பாட்டு மையத்தின் கவனம்

8. தாழ் மல்வது ஒய பல் நோக்கு அபிவிருத்தி கருத்திட்டம்

கருத்திட்டத்தின் மொத்த முதலீடு	ரூபா 22,900.00 மில்லியன்	பலனடையும் மாவட்டங்கள்	அனுராதபுரம், மன்னார் மற்றும் வவுனியா
நிதியங்கள் வழங்கப்படுகின்ற முறைகள்	தீர்மானிக்கப்படவில்லை	நீர்த்தேக்கத்தின் கொள்திறன்	209.0 மில்லியன் கன மீற்றர் ஹெக்டயார் 13,472
கருத்திட்டத்தின் காலப் பகுதி	2016 - 2024	பலனடைவோர்	அனுராதபுரம், மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் வாசிக்கும் மக்கள்
2022 க்கான நிதி ஏற்பாடுகள்	ரூபா 500 மில்லியன்	2023 க்கான நிதி ஏற்பாடுகள்	ரூபா. 550 மில்லியன்*
முழு மொத்த நிதி விருத்தி	ரூபா. 953.33 மில்லியன்	முழு மொத்த பௌதீக நிதி விருத்தி	4.28 %
2022 ஆம் ஆண்டில் நிதி விருத்தி	ரூபா 495.64 மில்லியன்		

2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகள்	• அணைக்கட்டின் நிர்மாணிப்பு • அரச வாடகை வீடுகளினதும், சுற்றுலாப் பயண பங்களாக்களினதும் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளன • நீரொழுகின் நிர்மாணிப்பு (அகழ்வு) • மாதிரி நீர்ப்பாசனப் பண்ணைகளின் நிர்மாணிப்பு • வலக் கரை மற்றும் இடக் கரை தாழ் ஊற்றின் விருத்தித் திட்டமிடுகை
கருத்திட்டத்தை செயற்படுத்துவதன் வாயிலாக கிடைக்கக் கூடிய முழு மொத்த பலன்கள்	• யோத வாவி மற்றும் அகதிமுரிப்பு குளத்தை அண்மித்ததாகவுள்ள 1,052 ஏக்கர் புதிய காணிகளுக்கும், (நெல் மற்றும் ஏனைய திடல் பயிர்கள்) 12,420 ஏக்கர் நிலப் பகுதிக்கு நீரை விநியோகித்தல் • வவுனியா, அனுராதபுரம் மற்றும் மன்னார் ஆகிய பிரதேசங்களில் 27 மில்லியன் கன மீற்றர் கொள்ளளவுள்ள குடியியல் மற்றும் குடி நீர் வசதிகளை விநியோகித்தல் • தேசிய நீர் மின் வலுத் தொகுதிக்கு வருடாந்தம் 4.68 கிகா வொட் திறன் கொண்ட மின்வலுவை ஒன்று சேர்த்தல் • சுற்றுலாத் துறையை மேம்படுத்துதல் • புதிய நகர திட்டமிடல் கருத்திட்டத்தின் கீழ் தந்திரிமலே பிரதேசத்தின் விருத்தி • வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களின் வெள்ளப் பெருக்கு கட்டுப்பாடு • சூரிய வலுச் சக்தி கருத்திட்டத்தின் அறிமுகம் • சொட்டு நீர் நீர்ப்பாசனக் கருத்திட்டங்களின் விருத்தி • கருத்திட்ட காலப் பகுதியினுள் புதிய தொழில் வாய்ப்புகளைத் தோற்றுவித்தல் • நன்னீர் மீன் வளர்ப்பு மற்றும் நீர் வளங்கள் விருத்தி • வன விலங்குகளின் நடமாட்டத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கை, வனாந்திர / வன சீவராசிகள் வன ஒதுக்கீடுகளை விருத்தி செய்தல் மற்றும் மீள் வன வளர்ப்பு • உள்ளக பாதை வலையமைப்பை மேம்படுத்துதல் • கம நல சேவைகளை வலுவூட்டுதல் மற்றும் நிறுவன அபிவிருத்தி

*தேசிய செயல்பாட்டு மையத்தின் கவனம்

9. கிங் நில்வலா திசை திருப்புக் கருத்திட்டம்

கருத்திட்டத்தின் மொத்த முதலீடு	ரூபா 138,000 மில்லியன்	பலனடையும் மாவட்டங்கள்	காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை
நிதியங்கள் வழங்கப்படுகின்ற முறைகள்	இலங்கை அரசு	நீர்த்தேக்கத்தின் கொள்திறன்	12/0.16/11 மில்லியன் கன மீற்றர்
கருத்திட்டத்தின் காலப் பகுதி	06 வருடங்கள்	பலனடைவோர்	கிட்டத்தட்ட 75,000 குடும்பங்கள்
2022 க்கான நிதி ஏற்பாடுகள்	ரூபா. 20 மில்லியன்	2023 க்கான நிதி ஏற்பாடுகள்	ரூபா. 15 மில்லியன்*
முழு மொத்த நிதி விருத்தி	ரூபா. 4,090 மில்லியன்	முழு மொத்த பௌதீக நிதி விருத்தி	92.5% (கட்டம் 01)

2022 ஆம் ஆண்டில் நிதி விருத்தி	ரூபா. 19 மில்லியன்
2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகள்	• சாத்தியக் கூற்று ஆய்வுகளை நிறைவு செய்த பிற்பாடு இறுதி அறிக்கை நீர்ப்பாசன அமைச்சின் செயலாளருக்கு முன் வைக்கப்பட்டது. • சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு ஆய்வு அறிக்கையின் இறுதி வரைவு 2022 டிசம்பர் 09 ஆம் திகதி கிடைக்கப் பெற்றதுடன், அது தொழில்நுட்ப ஆய்வுக் குழுவிற்கு ஆய்வுக்கென முன் வைக்கப்பட்டுள்ளது.
கருத்திட்டத்தை செயற்படுத்துவதன் வாயிலாக கிடைக்கக் கூடிய முழு மொத்த பலன்கள்	பிட்டதெனியவுக்கும், கொட்டபொலவுக்கும் இடையில் குறுக்கு அணையின் நிர்மாணிப்பு, பிட்டதெனியவிலிருந்து கொட்டபொல வரையான சுரங்கத்தின் நிர்மாணிப்பு, கொட்டபொலவிலிருந்து அம்பனாகல வரையான சுரங்கத்தின் நிர்மாணிப்பு, அம்பனாகல நீர்த்தேக்கத்தின் நிர்மாணிப்பு, அம்பனாகலவிலிருந்து முருதவெல வரையான சுரங்கத்தின் நிர்மாணிப்பு, முருதவெலவிலிருந்து சந்திரிக்கா குளம் வரையான கால்வாயின் நிர்மாணிப்பு, • 5,000 ஹெக்டயார் பாசனப் பிரதேசம், 50,000 குடும்பங்கள் பலனடையும் • 122 மில்லியன் கன மீற்றர் குடி நீர் மற்றும் கைத்தொழில் நீர் விநியோகிப்பு • 65 கிகா வொட் வருடாந்த நீரியல் மின் வலுத் தோற்றுவாய்

*தேசிய செயல்பாட்டு மையத்தின் கவனம்

10. மல்வது ஓய, மாதுரு ஓய மற்றும் கும்புக்கன் ஓய ஆற்றுப் படுக்கையுடன் தொடர்புடையதாக நிலக் கீழ் நீர் கண்காணிப்பு வலையமைப்பொன்றை நிலை நாட்டும் முதல் நிலை கருத்திட்டம்

கருத்திட்டத்தின் மொத்த முதலீடு	ரூபா. 5,613.00 மில்லியன்	பலனடையும் மாவட்டங்கள்	அனுராதபுரம், பொலன்னருவை, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை, பதுளை, மொனராகலை, அம்பாந்தோட்டை,புத்தளம்
நிதியங்கள் வழங்கப்படுகின்ற முறைகள்	நெதர்லாந்தின் ரபோ வங்கி மற்றும் இலங்கை அரசு	நீர்த்தேக்கத்தின் கொள்திறன்	-
கருத்திட்டத்தின் காலப் பகுதி	2018 - 2022	பலனடைவோர்	பொது மக்கள், முடிவெடுக்கும் அதிகாரிகள் , ஆராய்ச்சியாளர்கள் மற்றும் நிலத்தடி நீர் பங்குதாரர்கள்
2022 க்கான நிதி ஏற்பாடுகள்	ரூபா. 350 மில்லியன்	2023 க்கான நிதி ஏற்பாடுகள்	2022 இல் திட்டம் முடிக்கப்பட்டது
முழு மொத்த நிதி விருத்தி	ரூபா. 5,400.86 மில்லியன்	முழு மொத்த பௌதீக நிதி விருத்தி	100%

2022 ஆம் ஆண்டில் நிதி விருத்தி	ரூபா. 538.96 மில்லியன்
2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகள்	• கண்காணிப்புக் கிணறுகளை நிர்மாணித்தல் - 34 • கிணறுகளை கண்காணிப்பதற்கான கிணறுகளின் தலைமைக் கட்டமைப்புகளை நிர்மாணித்தல் - 65 • 87 கண்காணிப்புக் கிணறுகளுக்கான கண்காணிப்புக் கருவிகளைப் பொருத்துதல் • இணைய தளத்தை நிறுவுதல் • தரவு மையத்தை நிலை நாட்டுதல்
கருத்திட்டத்தை செயற்படுத்துவதன் வாயிலாக கிடைக்கக் கூடிய முழு மொத்த பலன்கள்	தேர்ந்தெடுக்கப்பட்ட 03 ஆற்றுப் படுகைகளில் நிலக் கீழ் நீர் கண்காணிப்பு வலையமைப்பை நிறுவுவதன் ஊடாக நீர் கையிருப்பு மற்றும் நீரின் தரத் தன்மை தொடர்பான நிகழ் நிலைத் தரவுகளை ஒன்று திரட்டுதல். இதன் வாயிலாக ஆற்றுப் படுகைகளிலுள்ள எதிர்கால நிலக் கீழ் நீர் முகாமைத்துவச் செயற்பாடுகள் மிகவும் பயனுறுதி மிக்கதாக அமையும்.

11.நுவரெலியா பெரெக்தென்ன குளத்தை மறு சீரமைத்தல்

விலை மதிப்பீட்டுத் தொகை	ரூபா 230 மில்லியன்	பலனடையும் மாவட்டங்கள்	நுவரெலியா
நிதி வசதிகள் பெறப்படும் செயன் முறை	இலங்கைக் குடியரசு	நீர்த்தேக்கத்தின் கொள்திறன் / பயிர்ச் செறிவு	3,000 மில்லியன் கன மீற்றர் 800 ஹெக்டயார்
கருத்திட்ட காலப் பகுதி	02 வருடங்கள்	பலனடைவோர்	3,000 குடும்பங்கள்
நிதியங்கள் 2022	ரூபா 54 மில்லியன்	2023 ஆம் ஆண்டிற்கான நிதியங்கள்	ரூபா 30 மில்லியன்
முழு மொத்த நிதி விருத்தி	ரூபா 106.03 மில்லியன்	முழு மொத்த பௌதீக விருத்தி (%)	91%
2022 ஆம் ஆண்டில் நிதி விருத்தி	ரூபா 49.58 மில்லியன்		
2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்	• அதிக வேரூன்றிய நீர் களைகளை வேரோடு அகற்றுதல் • குளத்திலுள்ள வண்டலை அகழ்ந்து வெளியகற்றுதல்		
கருத்திட்டத்தைச் செயற்படுத்துவதன் மூலம் கிடைக்கக் கூடிய முழு மொத்த பலன்கள்	• 800 ஹெக்டயார் பாசனக் காணிகளும், 3,500 குடும்பங்களும் பலனடையும் • 3,000 குடும்பங்களுக்குக் குடி நீரை விநியோகித்தல்		

12. ஒருங்கிணைந்த நீரேந்து மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவக் கருத்திட்டம் (IWWRMP)

விலை மதிப்பீட்டுத் தொகை	ரூபா 14,199.43 மில்லியன்	பலனடையும் மாவட்டங்கள்	முழு நாட்டுக்கும்
நிதி வசதிகள் பெறப்படும் செயன் முறை	உலக வங்கி, இலங்கைக் குடியரசு	நீர்த்தேக்கத்தின் கொள்திறன்/ பயிர்ச் செறிவு	3,667 மில்லியன் கன மீற்றர் 159,571 ஹெக்டயார்
கருத்திட்ட காலப் பகுதி	2021-2026	பலனடைவோர்	466,404 குடும்பங்கள்
நிதியங்கள் **2022**	ரூபா 3,000 மில்லியன்	**2023** ஆம் ஆண்டிற்கான நிதியங்கள்	ரூபா 3,000 மில்லியன்
முழு மொத்த நிதி விருத்தி	ரூபா 769.38 மில்லியன்	முழு மொத்த பௌதீக விருத்தி **(%)**	12.85%
2022 ஆம் ஆண்டில் நிதி விருத்தி	ரூபா 463.89 மில்லியன்		
2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்	பணிகள், பண்டங்கள் மற்றும் ஆலோசனை சார் சேவைகளுடன் தொடர்புடைய பெறுகை மற்றும் ஒப்பந்தச் செயற்பாடுகள் பின்வருமாறு • வடக்கு மாகாண சபை, நீர்ப்பாசன திணைக்களம் – கால்வாய்கள் மற்றும் அணைக்கட்டுகளின் புனரமைப்புகளுடன் தொடர்புடைய 7 பணி ஒப்பந்த வகுதிகள் • இலங்கை மகாவலி அதிகார சபை - கால்வாய்கள் மற்றும் அணைக்கட்டுகளின் புனரமைப்புகளுடன் தொடர்புடைய 7 பணி ஒப்பந்த வகுதிகள் • நீர்ப்பாசன திணைக்களம் – கால்வாய்கள் மற்றும் அணைக்கட்டுகளின் புனரமைப்புகளுடன் தொடர்புடைய 3 பணி ஒப்பந்த வகுதிகள் • மதியுறை சேவைகள் - கால்வாய்கள் மற்றும் அணைக்கட்டுகளின் புனரமைப்புகளுடன் தொடர்புடைய 7 பணி ஒப்பந்த வகுதிகள் • மதியுரையற்ற வகுதிகள் - 1 வகுதி • பண்டங்கள் - 4 வகுதிகள்		
கருத்திட்டத்தைச் செயற்படுத்துவதன் மூலம் கிடைக்கக் கூடிய முழு மொத்த பலன்கள்	கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் காரணமாக கருத்திட்டத்தின் கீழ் நேரடியாகப் பின்வரும் பலன்கள் தோற்றுவிக்கப்படும் • உத்தேச மேல் மகாவலி நீரேந்து பிரதேசத்தில் வாழ்கின்ற கிட்டத்தட்ட 110,000 குடும்பங்களுக்கு பண்ணை மற்றும் பண்ணைகளுக்குப் புறம்பான மண் மற்றும் நீர் பாதுகாப்பு செயற்பாடுகளின் ஊடாகப் பலன்கள் கிடைக்கப் பெறும். • தேர்ந்தெடுக்கப்பட்ட அபாய நிலை கூடிய 36 அணைக்கட்டுகள் சிதைவடையும் ஆபத்து நிலையைக் குறைத்தல் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவம் மற்றும் பயன்பாட்டிற்கென முன்னெடுப்பு மிக்க வினைத் திறன் செயற்பாட்டை மேம்படுத்துதல்		

	• அழிவுக்குள்ளான கால்வாய்த் தொகுதிகள் காரணமாக நீர் வீண் விரயமாவதைக் குறைந்ததல் மற்று ஏனைய திடல் பயிர்ச் செய்கையை விருத்தி செய்தல் • கருத்திட்டத்தின் விளைவாகப் பலன்கள் கிடைக்கப் பெறுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு தலைமைக் கருத்திட்டத்தின் தலையீட்டின் கீழ் இளையோர் மற்றும் மகளிர் பங்கேற்பை விருத்தி செய்தல்

13. கிவுல் ஒய நீர்த்தேக்கக் கருத்திட்டம்

விலை மதிப்பீட்டுத் தொகை	ரூபா 8,000 மில்லியன்	பலனடையும் மாவட்டங்கள்	வவுனியா, அனுராதபுரம் மற்றும் முல்லைத் தீவு
நிதி வசதிகள் பெறப்படும் செயன் முறை	இலங்கைக் குடியரசு	நீர்த்தேக்கத்தின் கொள்திறன்/ பயிர்ச் செறிவு	53.9 மில்லியன் கன மீற்றர் 2,400 ஹெக்டயார்
கருத்திட்ட காலப் பகுதி	04 வருடங்கள்	பலனடைவோர்	6,000 குடும்பங்கள்
நிதியங்கள் 2022	ரூபா 100 மில்லியன்	2023 ஆம் ஆண்டிற்கான நிதியங்கள்	ரூபா 100 மில்லியன்
முழு மொத்த நிதி விருத்தி	ரூபா 28.05 மில்லியன்	முழு மொத்த பௌதீக விருத்தி (%)	3.45%
2022 ஆம் ஆண்டில் நிதி விருத்தி	ரூபா 11.85 மில்லியன்		
2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்	• அணைக்கட்டின் வடிவமைப்பு • நீரோழுகின் வடிவமைப்பு • கலிங்கல்லின் வடிவமைப்பு • தாழ் ஊற்றுக் கால்வாயின் அளவீடு		
கருத்திட்டத்தைச் செயற்படுத்துவதன் மூலம் கிடைக்கக் கூடிய முழு மொத்த பலன்கள்	நீரை விநியோகிக்கக் கூடிய பிரதேசங்களை 1,700 ஹெக்டயார்களினால் அதிகரித்தல் (நெல் மற்றும் ஏனைய பயிர்கள்), 10,000 குடும்பங்களுக்குக் குடி நீர் விநியோகிப்பு, நிலக் கீழ் நீர் மட்டத்தை அதிகரித்தல், மீன் பிடிக் கைத்தொழில், கால் நடை வளங்கள், பயிர்ச் செய்கை மற்றும் தொழில் வாய்ப்புகளை உறுவமைத்தல்.		

14. மாதுரு ஒய வலக் கரை அபிவிருத்திக் கருத்திட்டம்

மதிப்பீட்டு பணத் தொகை	ரூபா 38,500 மில்லியன்	பலனடையும் மாவட்டங்கள்	மட்டக்களப்பு மற்றும் அம்பாரை
நிதி வசதிகள் வழங்கப்படும் முறை	இலங்கை அரசு	நீர்த்தேக்கத்தின் கொள்திறன்	18.4 மில்லியன் கன மீட்டர் 10,000 ஹெக்டயார்
கருத்திட்ட காலப் பகுதி	2021-2030	பலனடைவோர்	விவசாயிகள் - 4,500 விவசாயிகள் அல்லாதவர்கள் - 1,000
நிதி ஏற்பாடுகள் 2022	ரூபா. 400.00 மில்லியன்	2023 க்கான நிதி ஏற்பாடுகள்	ரூபா. 650 மில்லியன்

முழு மொத்த நிதி விருத்தி	ரூபா. 724.29 மில்லியன்	முழு மொத்த பௌதீக விருத்தி (%)	2.41%
2022 ஆம் ஆண்டில் நிதி விருத்தி	ரூபா. 390.20 மில்லியன்		
2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகள்	• வலக் கரை தலைமைக் கால்வாயின் 1.25 கிலோ மீற்றரின் நிர்மாணிப்பு ஆரம்பிக்கப்பட்டு, 1.0 கிலோ மீற்றர் நிறைவு செய்யப்பட்டுள்ளது • தம்மின்னவிலிருந்து 1.0 கிலோ மீற்றர் பிரவேசிப்புப் பாதையின் நிர்மாணிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளன. • புகையிரத குறுக்கு வீதியின் உட் பிரவேசிப்பு மற்றும் வெளிப் பிரவேசிப்பு தொடர்பான 2 கட்டுமானங்கள் நிர்மாணிக்கப்பட்டு அவற்றுள் 1.4 கிலோ மீற்றர் நீளம் நிறைவு செய்யப்பட்டுள்ளன.		
கருத்திட்டத்தை செயற்படுத்துவதன் வாயிலாக கிடைக்கின்ற முழு மொத்த விருத்தி	• நீர்ப்பாசன வசதிகள் மற்றும் ஒதுக்கீடுகள் மற்றும் ஏற்றுக் கொள்ளக் கூடிய குடி நீர் வசதிகளை மேம்படுத்துதல் (தேவையான கட்டுமானங்களை நிர்மாணிப்பதன் ஊடாக) • சுற்றாடலை விருத்தி செய்தல் மற்றும் உட் கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் • சுற்றாடல் நேயமிக்க சுற்றுலாப் பயண கருத்திட்டங்களை விருத்தி செய்யும் செயற்பாடுகள் • பாற் பண்ணை மேம்பாடு தொடர்பான வசதிகளை மேம்படுத்துதல் • நிர்மாணிக்கப்படவுள்ள குளங்களுடன் தொடர்புடைய மீனவத் தொழிலை மேம்படுத்துதல் • நீர்ப் பட்டியல் மற்றும் நீரைப் பகிரக் கூடிய பிரதேசங்களை வலுப்படுத்துதல்		

15.பெலவத்த லங்கா சீனி நிறுவனத்தின் தங்குமிடப் பிரதேசத்தின் குடியேற்ற நிலத்தின் பாசன செயற்பாடுகளை மேம்படுத்தும் திட்டம்

விலை மதிப்பீட்டுத் தொகை	ரூபா 143.5 மில்லியன்	பலனடையும் மாவட்டங்கள்	மொனராகலை
நிதி வசதிகள் பெறப்படும் செயன் முறை	இலங்கைக் குடியரசு மற்றும் பெல்வத்த லங்கா சீனி நிறுவனம்	நீர்த்தேக்கத்தின் கொள் திறன்/ பயிர்ச் செறிவு	மான்கட குளம் - 80 ஏக்கர் அடிகள் துன்முல்ல குளம் - 250 ஏக்கர் அடிகள் மீபள குளம் - 150 ஏக்கர் அடிகள் வெல்லஸ்ஸ குளம் - 175 ஏக்கர் அடிகள்
கருத்திட்ட காலப் பகுதி	2 வருடங்கள்	பலனடைவோர்	பெலவத்த பெருந் தோட்டக் கைத்தொழில்
நிதியங்கள் 2022	ரூபா 50 மில்லியன்	2023 ஆம் ஆண்டிற்கான நிதியங்கள்	ரூபா 30 மில்லியன்
முழு மொத்த நிதி விருத்தி	ரூபா 78.05 மில்லியன்	முழு மொத்த பௌதீக விருத்தி	44.42%

2022 ஆம் ஆண்டில் நிதி விருத்தி	ரூபா 41.04 மில்லியன்
2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்	• மான்கட குளம் 100% • மீபால குளம் 100% • துன்முள்ள 90%
கருத்திட்டத்தைச் செயற்படுத்துவதன் மூலம் கிடைக்கக் கூடிய முழு மொத்த பலன்கள்	பெலவத்த கரும்புத் தோட்டப் பிரதேசத்தில் நீர் சேமிப்புத் திறனை விருத்தி செய்து, அதன் கீழ் கரும்பு அறுவடையை விருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்

16. நாச்சாதுவ பாரிய நீர்ப்பாசன கருத்திட்டத்தின் கீழான பண்ணைக் காணிகளை மீள் விருத்தி செய்யும் ஆராய்ச்சி தொடர்பான முன்னோடு கருத்திட்டம்

மதிப்பீட்டு பணத் தொகை	ரூபா 156 மில்லியன்	பலனடையும் மாவட்டங்கள்	அனுராதபுரம்
நிதி வசதிகள் வழங்கப்படுகின்ற செயன் முறை	இலங்கை குடியரசு மற்றும் JIID நிறுவனம்	நீர்த்தேக்கத்தின் கொள் திறன்/ பயிர்ச் செறிவு	அபிவிருத்தியடைந்து வருகின்ற மொத்த நில அளவு - 48 ஹெக்டயார்கள் பயிர்ச் செய்கை காணிகளின் அளவு - 26.5 ஹெக்டயார்
கருத்திட்ட காலப் பகுதி	2020 - 2023	பலனடைவோர்	44 விவசாயக் குடும்பங்கள்
2022 ஆம் ஆண்டு காலப் பகுதிக்கான நிதியங்கள்	ரூபா 59 மில்லியன்	**2023** ஆம் ஆண்டிற்கென வேண்டப்பட்ட நிதியங்கள்	உள் நாட்டு நிதியம் - ரூபா 81.0 மில்லியன் ஜப்பான் நன்கொடை - 08.6 மில்லியன் மொத்தம் 89.6 மில்லியன்
முழு மொத்த நிதி விருத்தி	ரூபா 47.76 மில்லியன்	முழு மொத்த பௌதீக விருத்தி	40.00%
2022 ஆம் ஆண்டில் நிதி விருத்தி	ரூபா 26.66 மில்லியன்		
2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்	• காணி அளவீடு, காணிப் பிரச்சினைகளைத் தீர்த்தல், இடவமைப்பு எல்லைக் கற்களை வைப்பிலிட்டு காணி உரிமங்களை வழங்குதல் • 526 வயல் நிலங்களின் விஸ்தீரணப்படுத்தப்பட்ட 44 காணித் துண்டங்களுக்கு சம நிலைப்படுத்தப்பட்ட காணிகளைக் கையளித்தல் • 1,500 மீற்றர் நீளமான விவசாயப் பாதைகளை நிர்மாணித்தல் • நில மட்ட பாசனக் கால்வாய்களை நிர்மாணித்தல்		
கருத்திட்டத்தைச் செயற்படுத்துவதன் மூலம் கிடைக்கக் கூடிய முழு மொத்த பலன்கள்	• விவசாயிகள் நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் / தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கு இயைபாக்கமடைவர் • உற்பத்தி செலவை 35% இனால் குறைத்தல் • பயிர்ப் பல்வகைமை காரணமாக காணிகளினதும், பயிர்களினதும் விளைச்சலை மேலுயரத்துதல் • நீர்ப் பயன்பாட்டு வினைத் திறனை 40% - 60% வரை அதிகரித்தல் • விவசாய நடவடிக்கைகளிலிருந்து நீங்கிச் செல்கின்ற இளம்		

	பரம்பரையினரை விவசாயம் தொடர்பாக ஈர்த்தெடுக்கும் செயற்பாடுகளை முன்னேடுத்தல் • விவசாயப் பாதை வசதிகளை விருத்தி செய்தல் • விவசாயிகளின் வாழ்க்கைத் தர நிலைகளை மேம்படுத்துதல் • கருத்திட்டத்தின் வாயிலாக விருத்தி செய்யப்பட்ட காணிகளின் பொருளாதாரப் பெறுமதியை அதிகரித்தல் • இக் கருத்திட்டத்தை, எதிர்க்கால கருத்திட்டங்களிற்கான வழிகாட்டியாக முன்னெடுத்தல்

17. "கிராமத்துடனான கலந்துறையாடல்" நிகழ்ச்சித் திட்டம்

கருத்திட்டம்	மதிப்பீட்டு பணத் தொகை (ரூபா.மி)	கருத்திட்ட காலப் பகுதி	நிதி ஏற்பாடுகள் 2022	2022.12.31 விருத்தி	
				நிதி விருத்தி (ரூபா.மி)	பௌதீக விருத்தி
அனுராதபுர மாவட்டத்தின் கெபிதிகொல்லேப பிரதேச செயலாளர் பிரிவில் பதவிய மற்றும் வாஹல்கட பயிர்ச் செய்கை கருத்திட்டங்களுக்கு உரித்தான குளத் தொகுதிகளை மேம்படுத்துதல்	630.00	2021 - 2023	300.00	23.62	72%
பொலன்னருவை மாவட்டத்தின் வெடிகக்சிய பிரதேசத்தின் கிரிமெட்டிபிட்டிய மற்றும் ரம்பவெவ வரை மின்னேரியா குளத்திலிருந்து போசாக்குக் கால்வாயை நிர்மாணித்தல்	100.00	2021 – 2023	50.00	21.00	90.38%
திருகோணமலை மாவட்டத்தின் பேரமடு குளத்தை மேம்படுத்துதல்	347.00	2021 - 2023	150.00	33.77	81%
பொலன்னருவை மாவட்டத்தின் எலஹெர பிரதேசச் செயலாளர் பிரிவின் குமார எல்ல பிரதேசத்தில் குமார எல அணைக்கட்டை நிர்மாணித்தல்	24.00	2021 - 2022	7.14	6.22	100%
திருகோணமலை மாவட்டத்தின் பான் ஒய கால்வாய் நிர்மாணித்தல்	60.00	2021 - 2022	53.00	11.6	79.65%
புத்தளம் மாவட்டத்தில் நீர்ப்பாசன தொகுதி மறுசீரமைத்தல்	455.00	2021 - 2023	7.37	0.20	16.5%

"நீர்ப்பாசன செழுமை" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான கிராமிய குளங்கள் / அணைக்கட்டுகளுடன் தொடர்புடைய கால்வாய்களின் விருத்தி

நீர்ப்பாசன செழுமை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நீர்ப்பாசன அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் கிராமிய வயல்கள், அண்டிய குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சினால் 5000 கிராமிய குளங்கள்/அணைக்கட்டுகளின் மறு சீரமைப்புப் பணிகள் / மீள் நிலைப்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. மழை நீரைப் பாதுகாத்தல் மற்றும் அவற்றை முறையாக முகாமைத்துவப்படுத்துவதன் ஊடாக குடி நீர், கைத்தொழில், விவசாயம், சுற்றுலாத் துறை மற்றும் ஏனைய வருமானமீட்டல் செயற்பாடுகளுக்குத் தேவையான நீர்த் தேவையை பூர்த்தி செய்யும் நோக்கில் நாடு முழுதும் பரம்பியதாகக் காணப்படுகின்ற கிராமிய குளங்கள் / அணைக்கட்டுகள் மற்றும் கால்வாய்களைத் துரிதமாக மறு சீரமைக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டதன் வாயிலாக இலங்கையின் பொருளாதார மேம்பாட்டுக்கு உறுதுணையாக அமையக் கூடிய வாய்ப்பு கிடைத்தது. இன்றளவிலும் இந் நிகழ்ச்சித் திட்டம் நீர்ப்பாசன அமைச்சின் கீழ் செயற்பட்ட வண்ணமுள்ளது.

இந் நிகழ்ச்சித் திட்டம் நீர்ப்பாசன திணைக்களம், கமநல அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் மாகாண நீர்ப்பாசன திணைக்களம் மற்றும் கண்டி மாவட்டச் செயலகத்தினால் நாடு முழுதும் பரம்பியதாகவுள்ள மாவட்டங்கள் உள்ளடங்கக் கூடிய வகையில் செயற்படுத்தப்பட்டது. இவற்றுடன் தொடர்புடைய நிர்மாணிப்புப் பணிகள் இலங்கை இராணுவத்தின் பொறியியல் அணி, சிவில் பாதுகாப்பு அணி, இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், சிறைச்சாலைகள் திணைக்களம் போன்ற நிறுவனங்களின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டதுடன், விவசாய இயக்கங்களினதும், பொது மக்கள் இயக்கங்களினதும் பங்களிப்பும் இதற்கென பெற்றுக் கொள்ளப்பட்டது.

அனைத்து மாவட்டங்களிலும் கருத்திட்டத்தைத் தேர்ந்தெடுப்பதுடன் தொடர்புடைய பணிகள் மற்றும் செயற்படுத்துகை நிறுவனங்கள் மற்றும் பிரதேசவாசிகளுடன் கூட்டாக ஒருங்கிணைப்பை ஏற்படுத்திய வண்ணம் செயற்படுதல் போன்ற பணிகள் ஒவ்வொரு மாவட்டச் செயலாளர்களினதும் தலைமையில் அனைத்து பிரதேசச் செயலாளர்களினதும் பங்கேற்புடன் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கிராமிய குளங்களின் விருத்திச் செயற்பாட்டின் கீழ் 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியிலிருந்து தொடர்ச்சியாக் செயற்படுத்தக் கூடிய கருத்திட்டங்களையும், தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய கருத்திட்டங்களையும் 2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் செயற்படுத்துவதற்குத் திட்டங்கள் வகுக்கப்பட்டிருந்தன.

இதன் பிரகாரம் நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைக்கு மத்தியில் இக் கிராமிய குளங்களை விருத்தி செய்யும் கருத்திட்டங்கள் தொடர்பாக எதிர்ப்பார் வகையில் நிதியங்கள் ஒதுக்கிடப்படாதிருந்ததுடன், அன்றளவில் செயற்படுத்தும் பொருட்டு தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த புதிய கருத்திட்டங்கள் 2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் தேசிய ரீதியாக எடுக்கப்பட்ட தீர்மானங்களின் பிரகாரம் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், இக் கருத்திட்டங்களின் செயற்படுத்துகை தொடர்பாக ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. அக் கால கட்டத்தில் ஏதாவதொரு அளவில் பலனை அடையக் கூடிய கருத்திட்டங்கள் பௌதீக ரீதியாக நிறைவு செய்யப்பட்ட கருத்திட்டங்களாகக் கருதப்படும். மேலும், செயற்படுத்த முடியாத கருத்திட்டங்களை இரத்து செய்து, 2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நிறைவு செய்யாத கருத்திட்டங்கள் 2023 ஆம் ஆண்டு காலப் பகுதியில் செயற்படுத்துகைக்கென தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அவ் வருட இறுதியில் கிராமிய குளங்களை விருத்தி செய்யும், கருத்திட்டங்களை நிறைவு செய்வதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

அதன் பிரகாரம், 5000 கிராமிய குளங்கள் / அணைக்கட்டுகளுடன் தொடர்புடையதாக 5000 கால்வாய்களை மறு சீரமைக்கும் / மீள் கட்டமைக்கும் பணிகள் மற்றும் மீள் கட்டமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 1000 க்கு மேற்பட்ட குளங்கள் / அணைக்கட்டுகள் மற்றும் கால்வாய்களை மறு சீரமைக்கும் செயற்பாடுகள் 2022 ஆம் ஆண்டு காலப் பகுதியின் இறுதியில் நிறைவு செய்யப்பட்டுள்ளது. 2021 - 2023 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ரூபா 12,500 மில்லியன் செலவு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட ரீதியாக மறு சீரமைக்கப்பதற்கென தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள குளங்கள் / அணைக்கட்டுகள் - (**2022.12.31** ஆம் திகதிக்கு)

	மாவட்டம்	திட்டமிடப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை	2022 ஆண்டாகும் போது முடிக்கப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை	2023 ஆண்டுக்காக தெரிவுசெய்யப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை
1	கொழும்பு	25	22	1
2	கம்பஹா	37	30	6
3	களுத்துறை	44	40	5
4	காலி	98	85	8
5	அம்பாந்தோட்டை	67	53	10
6	மாத்தரை	106	102	2
7	கேகாலை	11	11	0
8	இரத்தினபுரி	30	30	0
9	கண்டி	117	111	4
10	மாத்தளை	40	26	10
11	நுவரெலியா	40	40	0
12	குருணாகலை	126	109	7
13	புத்தளம்	46	43	3
14	மட்டக்களப்பு	41	35	3
15	திருகோணமலை	51	50	2
16	யாழ்ப்பாணம்	42	38	0
17	முல்லைத் தீவு	18	14	0
18	கிளி நோச்சி	15	10	0
19	வவுனியா	26	24	0
20	மன்னார்	44	24	20
21	அனுராதபுரம்	89	62	19
22	பொலன்னருவை	37	33	2
23	பதுளை	78	76	0
24	மொனராகலை	45	42	1
25	அம்பாறை	67	57	3

** 07 கருத்திட்டங்கள் பௌதிக ரீதியாக நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் கொடுப்பனவுகள் மட்டும் மேற்கொள்ளவுள்ளன.*

செயற்படும் நிறுவனம் மற்றும் நிதி விருத்தி - 2022 ஆம் ஆண்டு

	நிறுவனம்	தேர்ந்தேடுக்கப்பட்ட முழு குளம் /அணைக்கட்டு/ கால்வாய்களின் எண்ணிக்கை	வேலை முடிக்கப்பட்டுள்ள குளம்/ அணைக்கட்டு /கால்வாய் எண்ணிக்கை	நிதியங்கள் 2022 (ரூபா. மில்லியன்)	2022.12.31 ஆம் திகதி வரையான செலவு (ரூபா. மில்லியன்)
1	நீர்ப்பாசன திணைக்களம்	811	663	*1888.16	1,149.13
2	கமநல அபிவிருத்தி திணைக்களம்	298	288	285.52	272.70
3	மாகாண நீர்ப்பாசன திணைக்களம்	146	137	28.07	27.60
4	இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம் (புனரமைப்புப்பணி)	19	19	*84.71	92.42
5	இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம் (A 9 பாதையில் அமைந்துள்ள தெரிவு செய்யப்பட்ட குள அபிவிருத்தி)	9	3	*150	3.54
6	மாவட்டச் செயலகம், கண்டி	57	57	27.16	27.16
7	நில அளவைத் திணைக்களம் (மேல் தெரிவு செய்யப்பட்ட கருத்திட்டங்கள் அடங்கலாக கணக்கெடுப்பு)	(1293)	(121)	8.30	7.73
8	ஏனையவை			21.08	19.48
	ஏனையவை	**1340**	**1167**	**2,493.00**	**1,599.76**
	நிதி விருத்தி 2022.12.31 – 71.5%				

** 2022 வருட இறுதி நிதி விருத்தி அறிக்கைக்கேற்ப மேல் ஒதுக்கீடு தேவைக்கேற்ப கணக்குப்பிரிவினால் அங்கீகரிக்கப்பட்ட முழு ஒதுக்கீடு மிகையாகாத படி திருத்திப்பட்டுள்ளது.*

நீர்ப்பாசன செழுமை திட்டம் - எரிகளின் கணக்கெடுப்பு தொடர்பான சுருக்கம் 2022 டிசம்பர் 31 வரை

மாவட்டம்	கருத்திட்டங்களின் எண்ணிக்கை	2022 க்கு முன் முடிக்கப்பட்ட ஏரிகளின் எண்ணிக்கை	2022 ல் முடிக்கப்பட்ட ஏரிகளின் எண்ணிக்கை	செயற்பாட்டில் உள்ளவை	மீதமுள்ள கருத்திட்டங்களின் எண்ணிக்கை	ரத்துசெய்யப்பட்ட இடைநீக்கம் செய்யப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை	நில அளவையாளர்களின் எண்ணிக்கை
கண்டி	28	2	8	4	14	0	4
புத்தளம்	77	0	2	3	71	1	2
குருணாகல்	79	0	17	8	54	0	4
அநுராதபுரம்	109	0	7	29	71	2	2
ஹம்பந்தோட்டை	382	27	18	135	202	0	6
மொனராகலை	415	21	5	8	381	0	3
திருகோணமலை	44	0	1	9	34	0	4
அம்பாரை	135	0	5	8	122	0	3
இரத்தினபுரி	24	1	7	16	0	0	2
வவுனியா	0	0	0	0	0	0	2
மொத்தம்	**1293**	**51**	**70**	**220**	**949**	**3**	**32**

* குறிப்பு - கணக்கு பிரிவினால் வழங்கப்பட்ட செலவு அறிக்கை ஏற்ப 2022ம் ஆண்டு டிசம்பர் இறுதியில் நில அளவைக்காக ரூபா.7,733,683.86 செலவு செய்துள்ளது

நீர்ப்பாசன திணைக்களம்

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் செயல்படுத்தப்படும் மகா பரிமாண மற்றும் நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்கள்

1. யான் ஓயா திட்டம்
2. கீழ் ஊவா திட்டம்
3. மஹகோன வாவி திட்டம்
4. மொரான நீர்த்தேக்கம்
5. எல்ல வாவி நீர்த்தேக்கம்
6. கும்புக்கன் ஓயா நீர்த்தேக்கம்
7. ருகம் கித்துள் நீர்த்தேக்கம் (முந்தேனியாறு ஆற்றுப் படுகை அபிவிருத்தித் திட்டம்)
8. பொலன்னறுவை மாவட்ட நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டம்
9. மொனராகலை மாவட்டத்தில் துரிதப்படுத்தப்பட்ட நீர்ப்பாசன அபிவிருத்தி திட்டம் (வெல்லஸ்ஸ நவோதயா)
10. களனி ஆற்றின் கரை பாதுகாப்பு
11. கொடிகமுவ குளத்தின் அபிவிருத்தி மற்றும் மேம்பாடுகள்
12. களனி கங்கை, முன்தெனியாறுப்படுகை, களுகங்கைப் படுகை, நில்வல கங்கைப் படுகை மற்றும் ஜிங்கங்கையில் வெள்ளத் தணிப்புத் திட்டங்கள்
13. குடவிலச்சிய நீர்த்தேக்கத்தை புனரமைத்தல்
14. தெமட்டகல்ல குளத்தை புனரமைத்தல்
15. உமா ஓயா கீழ்நிலை அபிவிருத்தி திட்டம்
16. ஹிம்பிலியகட வத்தேகெதர உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டம்
17. விலகண்டி நீர்த்தேக்கம்
18. மஹகல்கமுவ குளத்தை பெருக்குதல்

நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் ஏனைய திட்டங்கள்

1. தெதுரு ஓயா நீர்த்தேக்கத் திட்டம்

1. யான் ஓயா நீர்த்தேக்கத் திட்டம்

மதிப்பிடப்பட்ட செலவு	ரூ. 48,355.3 Mn	**பயன்பெறும் மாவட்டங்கள்**	அனுராதபுரம், திருகோணமலை
நிதி மூலம்	GOSL	**நீர்த்தேக்கத் திறன்/ பாசன நிலப் பகுதி**	169MCM 8,700 ha
திட்ட காலம்	2012 – 2023	**பயனாளிகள்**	9,000 குடும்பங்கள்
ஒதுக்கீடு 2022	ரூ. 800 Mn	**2023க்கான ஒதுக்கீடு**	ரூ. 3,500 Mn
ஒட்டுமொத்த நிதிசார் முன்னேற்றம்	ரூ.36,891.054 Mn	**ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் (%)**	85.68
நிதி சார் முன்னேற்றம் 2022	ரூ. 616.282 Mn		
2022ல் நடந்த பணிகள்	• நிலம் கையகப்படுத்துதல் மற்றும் இழப்பீடு - 7.1% • புதிய IFF இன் வளர்ச்சி – 5.2 % • இசன் வாவி தலைமை பணிகளின் கட்டுமானம் – 19%		
2023க்கான உத்தேச திட்டம்	• நிலம் கையகப்படுத்துதல் மற்றும் மீள்குடியேற்றம் ஆகியவற்றின் இருப்பு • புதிய மற்றும் ஏற்கனவே உள்ள நீர்ப்பாசன உள்கட்டமைப்பு மேம்பாட்டின் மீதமுள்ள வேலை • சுற்றுச்சூழல் மற்றும் தொல்பொருள் மேலாண்மை மற்றும் அதற்கு பின்னரான கவனிப்பு		
திட்டத்தின் ஒட்டுமொத்த நன்மைகள்	• 8,700 ஹெக்டேர் புதிய மற்றும் ஏற்கனவே உள்ள நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதிகளை வழங்குதல். • அனுராதபுரம் மாவட்டத்தில் 50,000 குடும்பங்களுக்கும் திருகோணமலை மாவட்டத்தில் 20,000 குடும்பங்களுக்கும் குடிநீர் விநியோகம் • சாலை மேம்பாடு: 8 கிமீ கார்பெட் சாலை, 40 கிமீ சரளை சாலைகள் • நகரமயமாக்கஞ்சார் அபிவிருத்தி: 4 கிராமங்கள் வளர்ச்சியடைந்தன, சமுதாய கூடம், சிறுவர் பள்ளி, அனைத்து கிராமங்களிலும் சேவா பியாச கட்டப்பட்டது. • 16 கிமீ நீளமான யானை வேலி அமைத்தல்.		

2. கீழ் ஊவா திட்டம்

மதிப்பிடப்பட்ட செலவு	ரூ. 1,250 Mn	**பயன்பெறும் மாவட்டங்கள்**	மொனராகலை
நிதி மூலம்	GOSL	**நீர்த்தேக்கத் திறன்/ பாசன நிலப் பகுதி**	வடகல ஆ ஆர – 0.2 MCM மல்லிப்பொத்த ஆர – 1 MCM தெபர–1.25 MCM **கிடைக்கும் நிலம்** - 971 **ஹெக்டேர்** **புதிய நிலம்** - 728 **ஹெக்டேர்**
திட்ட காலம்	2007 – 2023	**பயனாளிகள்**	வடகல ஆர - 32 குடும்பங்கள் மல்லிப்பொத்த ஆர - 250 குடும்பங்கள் தெபர ஆர- 72 குடும்பங்கள்
ஒதுக்கீடு 2022	ரூ. 60 Mn	**2023க்கான ஒதுக்கீடு**	ரூ. 30 Mn
ஒட்டுமொத்த நிதிசார் முன்னேற்றம்	ரூ. 746.692 Mn	**ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் (%)**	86.15
நிதி சார் முன்னேற்றம் 2022	ரூ. 60 Mn		
2022ல் நடந்த பணிகள்	தெபர ஆர ஊட்டி கால்வாய் அமைத்தல்		
2023க்கான உத்தேச திட்டம்	தெபர ஆர ஊட்டி கால்வாயின் மீதமுள்ள பணிகள்		

திட்டத்தின் ஒட்டுமொத்த நன்மைகள்	310 ஹெக்டேர் புதிய நிலம் மற்றும் ஏற்கனவே உள்ள நிலத்திற்கு நீர்ப்பாசன வசதிகளை வழங்குதல்
ஒட்டுமொத்த நன்மைகளிலிருந்து அடையப்பட்ட நன்மைகள்	728 ஹெக்டேர் புதிய நிலமும், தற்போதுள்ள நிலத்தில் 971 ஹெக்டேரும் இருமுறை சாகுபடிக்கு நீர்ப்பாசன வசதிகளை வழங்க வேண்டும்.

3. மஹாகோன வாவி திட்டம்

மதிப்பிடப்பட்ட செலவு	ரூ. 235 Mn	**பயன்பெறும் மாவட்டங்கள்**	மாத்தளை
நிதி மூலம்	GOSL	**நீர்த்தேக்கத் திறன்/ பாசன நிலப் பகுதி**	0.78 MCM கிடைக்கும் நிலம் - 16 ஹெக்டேர் புதிய நிலம் - 249 ஹெக்டேர்
திட்ட காலம்	2012 – 2022	**பயனாளிகள்**	200 குடும்பங்கள்
ஒதுக்கீடு 2022	ரூ. 13 Mn	**2023க்கான ஒதுக்கீடு**	-
ஒட்டுமொத்த நிதிசார் முன்னேற்றம்	ரூ. 234.866Mn	**ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் (%)**	100
நிதி சார் முன்னேற்றம் 2022	ரூ. 12.999 Mn		
2022ல் நடந்த பணிகள்	• 1+200 முதல் 2+000 வரை RB கால்வாய் அமைத்தல் • வயல் கால்வாய்கள் FC01, FC02, FC05 கட்டுமானம்		
2023க்கான உத்தேச திட்டம்	திட்டம் 2022 இல் நிறைவடைந்தது		
திட்டத்தின் ஒட்டுமொத்த நன்மைகள்	தற்போதுள்ள நிலத்தில் 16 ஹெக்டேர் மற்றும் புதிய நிலத்தில் 249 ஹெக்டேர் பாசனம்.		

4. மொரான நீர்த்தேக்கம் திட்டம்

மதிப்பிடப்பட்ட செலவு	ரூ. . 2,900 Mn	**பயன்பெறும் மாவட்டங்கள்**	பதுளை
நிதி மூலம்	GOSL	**நீர்த்தேக்கத் திறன்/ பாசன நிலப் பகுதி**	16 MCM/ 570 ha
திட்ட காலம்	2012 – 2023	**பயனாளிகள்**	1,300 குடும்பங்கள்
ஒதுக்கீடு 2022	ரூ. . 130 Mn	**2023க்கான ஒதுக்கீடு**	ரூ. . 180 Mn
ஒட்டுமொத்த நிதிசார் முன்னேற்றம்	ரூ. . 2,655.326 Mn	**ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் (%)**	98.22
நிதி சார் முன்னேற்றம் 2022	ரூ. . 82.483 Mn		
2022ல் நடந்த பணிகள்	• நிலம் கையகப்படுத்துதல் மற்றும் இழப்பீடு - 27 % • மீள் காடு வளர்ப்பு திட்டம்		
2023க்கான உத்தேச திட்டம்	• நிலம் கையகப்படுத்துதல் - மீதமுள்ள பணிகள்		
திட்டத்தின் ஒட்டுமொத்த நன்மைகள்	• 570 ஹெக்டேர் புதிய மற்றும் தற்போதுள்ள நிலத்திற்கு நீர்ப்பாசன வசதிகளை வழங்குதல் மற்றும் 1,300 குடும்பங்களுக்கு பயனளித்தல் • 500 குடும்பங்களுக்கு குடிநீர் விநியோகம் • 25 கிமீ நீள சாலை அமைத்தல். • தேனீ வளர்ப்பு குறித்த பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துதல் • உள்நாட்டு மீன்பிடி தொடர்பான வேலைத்திட்டங்களை நடத்துதல் • வீடற்ற நிலையில் உள்ள ஊனமுற்ற குடும்பத்திற்கு திட்டத்தின் மூலம் வீடு கட்டுதல்		

	• கிராமப்புறங்களில் சமூக செயற்பாடுகளை மேம்படுத்தும் வகையில் இரண்டு சனசமூக மண்டபங்களை நிர்மாணித்தல், தபால் நிலையங்களை நிர்மாணித்தல், யல்வெல மற்றும் கூடலுனு வித்தியாலய பாடசாலைகளுக்கான அணுகு வீதிகளை மேம்படுத்துதல் • காடு வளர்ப்பு திட்டம்

5. எல்ல வாவி நீர்த்தேக்கம்

மதிப்பிடப்பட்ட செலவு	ரூ. . 1,532 Mn	**பயன்பெறும் மாவட்டங்கள்**	இரத்தினபுரி
நிதி மூலம்	GOSL	**நீர்த்தேக்கத் திறன்/ பாசன நிலப் பகுதி**	1.91 MCM/ 570 ஹெக்டேர்
திட்ட காலம்	03 Yeaரூ. (2021-2024)	**பயனாளிகள்**	4,000குடும்பங்கள்
ஒதுக்கீடு 2022	ரூ. . 100 Mn	**2023க்கான ஒதுக்கீடு**	ரூ. . 100 Mn
ஒட்டுமொத்த நிதிசார் முன்னேற்றம்	ரூ. . 261.851 Mn	**ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் (%)**	14.65
நிதி சார் முன்னேற்றம் 2022	ரூ. . 93.199 Mn		
2022ல் நடந்த பணிகள்	• தளத்தை சுத்தம் செய்தல், தள அலுவலகம், கடைகள் & அணுகல் சாலைகள் அமைத்தல் - 11% • பிரதான அணையின் கட்டுமானம் - 1.5% • சேடில் அணையின் கட்டுமானம் - 3.1% • மதகுடன் இணைந்த முகப்பின் கட்டுமானம் - 34.8% • மீள்குடியேற்றம் மற்றும் இழப்பீடு – 4%		
2023க்கான உத்தேச திட்டம்	• கசிவு, மதகு மற்றும் அணையின் மீதமுள்ள பணியைத் தொடர்தல்		
திட்டத்தின் ஒட்டுமொத்த நன்மைகள்	• விவசாயம் மற்றும் வீட்டு உபயோகத்திற்கு தண்ணீர் வழங்குவதன் மூலம் அப்பகுதியில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் • வறண்ட காலங்களில் நீர்ப்பாசன விவசாயத்திற்கு நீர் பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் பாசனப் பரப்பை 350 ஏக்கால் விரிவுபடுத்துதல். • தற்போதுள்ள ஹுலாங்டாவா மற்றும் பனமுரா திட்டத்தின் பயிர் சாகுபடி தீவிரத்தை அதிகரித்தல். • கொலன்னா நீர் வழங்கல் திட்டத்தின் மூலம் குடிநீர் தேவை 7000 m3/நாள். உள்நாட்டு மீன்பிடி தொழில் மற்றும் சுற்றுச்சூழல் தேவைகளுக்கு சேவை செய்தல்.		

6. கும்புக்கன் ஓயா நீர்த்தேக்கத் திட்டம்

மதிப்பிடப்பட்ட செலவு	ரூ. . 32,397.3 Mn	**பயன்பெறும் மாவட்டங்கள்**	மொனராகலை
நிதி மூலம்	GOSL	**நீர்த்தேக்கத் திறன்/ பாசன நிலப் பகுதி**	48 MCM/ 5,429 ஹெக்டேர்
திட்ட காலம்	4 yeaரூ.	**பயனாளிகள்**	10,000 குடும்பங்கள்
ஒதுக்கீடு 2022	ரூ. . 127 Mn	**2023க்கான ஒதுக்கீடு**	ரூ. . 300 Mn
ஒட்டுமொத்த நிதிசார் முன்னேற்றம்	ரூ. . 417.193 Mn	**ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் (%)**	1.96
நிதி சார் முன்னேற்றம் 2022	ரூ. .98.894 Mn		
2022ல் நடந்த பணிகள்	• நிலம் கையகப்படுத்துதல் மற்றும் இழப்பீடு - 4.1% • தாழ்நிலை அணுகல் சாலையின் கட்டுமானம் - 39% • திட்ட இயக்குநர் அலுவலகத்தின் கட்டுமானம் - 20%		
2023க்கான உத்தேச திட்டம்	• நிலம் கையகப்படுத்துதல் மற்றும் இழப்பீடு • RB மற்றும் LB நீர்ப்பாசன அமைப்பு மேம்பாடு		
திட்டத்தின் ஒட்டுமொத்த	• 5,429 ஹெக்டேர் புதிய மற்றும் ஏற்கனவே உள்ள நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதிகளை வழங்குதல். • ஆண்டு குடிநீர் ஒதுக்கீடு 12 MCM		

நன்மைகள்	• மாற்று சாலைகள் மேம்பாடு (சுமார் 15 கிமீ) • வருடாந்த நீர் மின் உற்பத்தி 16GWh. • உள்நாட்டு மீன்பிடி வளர்ச்சி • மீள்குடியேற்றப் பகுதியில் நகர அபிவிருத்தி • தேவைப்படும் நபர்களுக்கு வருமானம் ஈட்டும் திட்டம் • மனித யானை மோதலை தடுக்க யானை வேலி அமைத்தல்.

7. முந்தேனி ஆறு ஆற்றுப் படுகை மேம்பாட்டுத் திட்டம் (ருகம்-கித்துள்)

மதிப்பிடப்பட்ட செலவு	**ரூ**. . 24,141 Mn	**பயன்பெறும் மாவட்டங்கள்**	**மட்டக்களப்பு, அம்பாறை**
நிதி மூலம்	GOSL + Foreign	**நீர்த்தேக்கத் திறன்/ பாசன நிலப் பகுதி**	**ருகம் கித்துள்**–88MCM **மஹா ஓயா** - 80 MCM 6,500 **ஹெக்டேர்**
திட்ட காலம்	6 Yeaரூ. (2021 - 2027)	**பயனாளிகள்**	50,000 **குடும்பங்கள்**
ஒதுக்கீடு 2022	GOSL - **ரூ**. 253 Mn	**2023க்கான ஒதுக்கீடு**	**ரூ**. . 160 Mn
ஒட்டுமொத்த நிதிசார் முன்னேற்றம்	**ரூ**. . 347.234 Mn	**ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் (%)**	2.29
நிதி சார் முன்னேற்றம் 2022	**ரூ**. . 49.78 Mn		
2022ல் நடந்த பணிகள்	• ஆய்வுகள் – 9%• நிலம் கையகப்படுத்துதல் மற்றும் மீள்குடியேற்றம் -3 % • PMU மற்றும் PIU க்கான அலுவலக கட்டிடம் கட்டுதல் - 11%		
2023க்கான உத்தேச திட்டம்	• விரிவான ஆய்வு மற்றும் விளிம்பு ஆய்வு • வடிவமைப்பு வேலைக்கான கட்டணம்		
திட்டத்தின் ஒட்டுமொத்த நன்மைகள்	• 10,000 விவசாயக் குடும்பங்களில் 6,500 ஹெக்டேர் புதிய மற்றும் ஏற்கனவே உள்ள நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதிகளை வழங்குதல். • மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டத்தில் 31,000 குடும்பங்களுக்கு குடிநீர் விநியோகம் • கீழ்நிலைப் பகுதியில் வெள்ளக் கட்டுப்பாடு. • இரண்டு நீர்த்தேக்கங்களிலும் வருடத்திற்கு 800 மெட்ரிக் டன்கள் உள்நாட்டு மீன்வளத்தை அதிகரிப்பது • 85 கிமீ சாலை வலையமைப்பு அமைத்தல். • நகர அபிவிருத்தி • யானை வேலி அமைத்தல் • காடு வளர்ப்பு திட்டம் • விதை நெல் உற்பத்திக்கு தண்ணீர் வழங்குதல் • விவசாயிகள் அமைப்பை வலுப்படுத்துதல் • வருமானம் உருவாக்கும் திட்டம் மற்றும் பயிற்சி (விவசாயம் & கால்நடை விரிவாக்கம்)		

8. பொலன்னறுவை மாவட்ட நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டம்

மதிப்பிடப்பட்ட செலவு	7,000 Mn	**பயன்பெறும் மாவட்டங்கள்**	**பொலன்னறுவை**
நிதி மூலம்	GOSL	**நீர்த்தேக்கத் திறன்/ பாசன நிலப் பகுதி**	351,700 Acft.. (04 **தாங்கிகள்**)
திட்ட காலம்	2016-2023	**பயனாளிகள்**	29,790 **குடும்பங்கள்**
ஒதுக்கீடு 2022	**ரூ**. . 50 Mn	**2023க்கான ஒதுக்கீடு**	**ரூ**. . 200 Mn
ஒட்டுமொத்த நிதிசார் முன்னேற்றம்	**ரூ**. . 1,333.266 Mn	**ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் (%)**	27.21
நிதி சார் முன்னேற்றம் 2022	**ரூ**. . 47.297 Mn		
2022ல் நடந்த பணிகள்	• கடுல்ல திட்டம், பராக்கிரம சமுத்திர திட்டம், மின்னேரியா திட்டம், சிஸ்டம் ஜி திட்டம், கிரித்தலே திட்டத்திற்கான கால்வாய் மேம்பாடு		

2023க்கான உத்தேச திட்டம்	• கடுல்ல திட்டம், பராக்கிரம சமுத்திர திட்டம், மின்னேரியா திட்டம், சிஸ்டம் ஜி திட்டம், கிரித்தலே திட்டம் ஆகியவற்றில் கால்வாய் மேம்பாடுகளை தொடருதல்
திட்டத்தின் ஒட்டுமொத்த நன்மைகள்	• "யால" பருவத்தில் பொலன்னறுவை மாவட்டத்தில் நீர் பற்றாக்குறையை குறைத்தல் மற்றும் நீர் விநியோகத்தின் வினைத்திறனை மேம்படுத்துதல். • "வடகிழக்கு நிலவு" காலத்தில் பொலன்னறுவை மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினால் நெற்பயிர்களுக்கு ஏற்படும் சேதங்களைக் குறைத்தல்.

9. மொனராகலை மாவட்டத்தில் துரிதப்படுத்தப்பட்ட நீர்ப்பாசன அபிவிருத்தி திட்டம் (வெல்லஸ்ஸ நவோதயா)

மதிப்பிடப்பட்ட செலவு	**ரூ**. . 2,500 Mn	**பயன்பெறும் மாவட்டங்கள்**	**மொனராகலை**
நிதி மூலம்	GOSL	**நீர்த்தேக்கத் திறன்/ பாசன நிலப் பகுதி**	- 3,179 ஹெக்டேர்
திட்ட காலம்	2016 - 2023	**பயனாளிகள்**	15,000 **குடும்பங்கள்**
ஒதுக்கீடு 2022	**ரூ**. . 150 Mn	**2023க்கான ஒதுக்கீடு**	**ரூ**. . 150 Mn
ஒட்டுமொத்த நிதிசார் முன்னேற்றம்	**ரூ**. . 1,180.134 Mn	**ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் (%)**	58.67
நிதி சார் முன்னேற்றம் 2022	**ரூ**. . 148.993 Mn		
2022ல் நடந்த பணிகள்	• நீர்ப்பாசனப் பணிகளைச் சீரமைத்தல் – 8 % • சிறு குளங்கள் புனரமைப்பின் கீழ் பைலேகம, மொரகொல்ல, ஊரா உல மற்றும் தெட்டகமுவ குளங்களுக்கான அணைக்கட்டு நிர்மாணப் பணிகள் நடைபெற்று வருகின்றன. • எழுகே எலவுக்கான மண் வேலைகள் 90% நிறைவடைந்துள்ளது மற்றும் பெட்டி கல்வெர்ட் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.		
2023க்கான உத்தேச திட்டம்	• மொரகொல்ல குளம், பைலேகம குளம், ஊரா உலா குளம், தெட்டகமுவ குளம், மஹாபெலஸ்ஸ குளம் மற்றும் எல்லுகே எல குளம் புனரமைப்பு.		
திட்டத்தின் ஒட்டுமொத்த நன்மைகள்	• தற்போதுள்ள 3179 ஹெக்டேர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதிகளை வழங்குதல் • புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள் மற்றும் ஆர்ப்பாட்டம் பற்றிய பைலட் ஆய்வு • தற்போதுள்ள நீர்ப்பாசன உள்கட்டமைப்பின் மறுசீரமைப்பு • பிற உள்கட்டமைப்பு மேம்பாடு (கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறம்) • நீர்வள மேம்பாட்டின் சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்தல், தரவு சேகரிப்பு மற்றும் ஆய்வு செய்தல்.		

10. களனி நதிக்கரை பாதுகாப்பு திட்டம்

மதிப்பிடப்பட்ட செலவு	ரூ. . 1000 Mn	**பயன்பெறும் மாவட்டங்கள்**	கம்பஹா, கொழும்பு
நிதி மூலம்	GOSL	**நீர்த்தேக்கத் திறன்/ பாசன நிலப் பகுதி**	-
திட்ட காலம்	2018-2024	**பயனாளிகள்**	15,000 குடும்பங்கள்
ஒதுக்கீடு 2022	ரூ. . 145 Mn	**2023க்கான ஒதுக்கீடு**	ரூ. . Mn 400
ஒட்டுமொத்த நிதிசார் முன்னேற்றம்	ரூ. . 430.526 Mn	**ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் (%)**	38.59
நிதி சார் முன்னேற்றம் 2022	ரூ. . 95.782 Mn		
2022ல் நடந்த பணிகள்	• களனி வடக்கு கட்டை மேம்படுத்துதல். • களனி வெள்ளக் கரையை அண்டிய ஆற்றங்கரையைப் பாதுகாப்பதற்காக காபியன் சுவர்கள் & தாள் பைல் சுவர்கள் அமைத்தல். • சிறு வெள்ளப் பாதுகாப்புக் கட்டமைப்புகளை மேம்படுத்துதல்.		
2023க்கான உத்தேச திட்டம்	• களனி வடக்குக் கட்டு, ஆற்றங்கரைப் பாதுகாப்பு, சிறு வெள்ளப் பாதுகாப்புக் கட்டமைப்புகள் மற்றும் நிலம் கையகப்படுத்துதல் ஆகியவற்றை மேம்படுத்துதல்		

திட்டத்தின் ஒட்டுமொத்த நன்மைகள்	களனி பிரதேசத்தில் உள்ள சுமார் 15,000 குடும்பங்கள், அவர்களது சொத்துக்கள், தொழிற்சாலைகள், வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்புகளை களனி கங்கையின் வருடாந்த வெள்ளத்திலிருந்து பாதுகாத்தல்.

11. கொடிகமுவ குளத்தின் அபிவிருத்தி மற்றும் மேம்பாடுகள்

மதிப்பிடப்பட்ட செலவு	ரூ. . 234.63 Mn	**பயன்பெறும் மாவட்டங்கள்**	மாத்தளை
நிதி மூலம்	GOSL	**நீர்த்தேக்கத் திறன்/ பாசன நிலப் பகுதி**	0.25 MCM 119 ஹெக்டேர்
திட்ட காலம்	2018 – 2023	**பயனாளிகள்**	265 குடும்பங்கள்
ஒதுக்கீடு 2022	ரூ. . 50 Mn	**2023க்கான ஒதுக்கீடு**	ரூ. . 35 Mn
ஒட்டுமொத்த நிதிசார் முன்னேற்றம்	ரூ. . 171.469 Mn	**ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் (%)**	77.13
நிதி சார் முன்னேற்றம் 2022	ரூ. . 36.829 Mn		
2022ல் நடந்த பணிகள்	• தாங்கியின் கட்டு கட்டுதல் • கசிவு கட்டுமானம் • ரிப் ராப் மற்றும் டோ ஃபில்டரின் கட்டுமானம் • LB மதகு மற்றும் RB மதகு கட்டுதல் • அணைக்கட்டு கட்டுமானம் • ஊட்டி கால்வாய், பிரதான கால்வாய் மற்றும் IFF கட்டுமானம்		
2023க்கான உத்தேச திட்டம்	அனைத்து கட்டுமான பணிகளையும் முடித்தல்		
திட்டத்தின் ஒட்டுமொத்த நன்மைகள்	தற்போதுள்ள 119 ஹெக்டேர் நிலத்திற்கு இரு பருவங்களிலும் சாகுபடிக்கு பாசன நீர் வழங்குதல்.		

12. களனி, முந்தேனியாறு, களு, நில்வலா மற்றும் ஜின் கங்கைப் படுகைகளில் வெள்ளத் தணிப்புத் திட்டங்கள்

மதிப்பிடப்பட்ட செலவு	**ரூ**. . 2,100 Mn	**பயன்பெறும் மாவட்டங்கள்**	**காலி**, **மாத்தறை**, **களுத்துறை**, **கொழும்பு**
நிதி மூலம்	GOSL	**நீர்த்தேக்கத் திறன்/ பாசன நிலப் பகுதி**	-
திட்ட காலம்	05 Yea**ரூ**. (2018-2022)	**பயனாளிகள்**	37,000 **குடும்பங்கள்**
ஒதுக்கீடு 2022	**ரூ**. . 100 Mn	**2023க்கான ஒதுக்கீடு**	**ரூ**. . 100 Mn
ஒட்டுமொத்த நிதிசார் முன்னேற்றம்	**ரூ**. . 394.601 Mn	**ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் (%)**	20.43
நிதி சார் முன்னேற்றம் 2022	**ரூ**. . 84.496 Mn		
2022ல் நடந்த பணிகள்	• களு கங்கை, ஜின் கங்கை மற்றும் நில்வலா கங்கைப் படுகைகளில் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்புகளைத் தணிக்க வெள்ளக் கரைகளை புனரமைத்தல். • வடிகால் கால்வாய் அமைப்புகள் & வெள்ளப் பாதுகாப்பு கட்டமைப்புகள் புனரமைப்பு • நில்வலா நீரேற்று நிலையங்களை புனரமைத்தல் • வடிகால் மற்றும் வெள்ள அமைப்பு பிரிவின் நிர்வாக கட்டிடத்தை புதுப்பித்தல்.		
2023க்கான உத்தேச திட்டம்	• ஜின் கங்கையில் வெள்ளப் பாதுகாப்புக் கட்டுகளைப் பலப்படுத்துதல். • துடாவ, மாகல்லகொட மற்றும் தல்கஹகொட பம்ப் ஹவுஸ் புனரமைப்பு, நில்வளாவில் வெள்ளப் பெருக்குகளை புனரமைத்தல் • வெள்ளத் தணிப்பு மற்றும் களனி கங்கையில் உள்ள வெள்ளக் கரைகளின் சிறு புனரமைப்புப் பணிகளுக்காக நகர்ப்புறத்தில் வடிகால் வலையமைப்புகளை மேம்படுத்துதல்.		
திட்டத்தின் ஒட்டுமொத்த நன்மைகள்	• 5000 ஹெக்டேர் விவசாய நிலங்களையும் சுமார் 20,000 குடும்பங்களையும் ஜின் கங்கைப் படுகையில் வருடாந்த வெள்ள சேதங்களிலிருந்து பாதுகாக்கிறது.		

	• 5060 ஹெக்டேர் விவசாய நிலங்களையும் சுமார் 12,000 குடும்பங்களையும் நில்வலா படுகையில் வருடாந்த வெள்ள சேதங்களிலிருந்து பாதுகாக்கிறது. • 200 ஹெக்டேர் விவசாய நிலங்களையும் சுமார் 5,000 குடும்பங்களையும் களு கங்கைப் படுகையில் வெள்ள சேதங்களிலிருந்து பாதுகாக்கிறது.

13. குடவிலச்சிய நீர்த்தேக்கத் திட்டம்

மதிப்பிடப்பட்ட செலவு	ரூ. . 6,000 Mn	**பயன்பெறும் மாவட்டங்கள்**	அனுராதபுரம்
நிதி மூலம்	GOSL	**நீர்த்தேக்கத் திறன்/ பாசன நிலப் பகுதி**	23 MCM / 1078 ஹெக்டேர்
திட்ட காலம்	03 Yeaரூ. (2021-2023)	**பயனாளிகள்**	25,000 குடும்பங்கள்
ஒதுக்கீடு 2022	ரூ. . 86 Mn	**2023க்கான ஒதுக்கீடு**	ரூ. . 300 Mn
ஒட்டுமொத்த நிதிசார் முன்னேற்றம்	ரூ. . 159.4 Mn	**ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் (%)**	4.952
நிதி சார் முன்னேற்றம் 2022	ரூ. . 56.753 Mn		
2022ல் நடந்த பணிகள்	• அணுகல் சாலையின் கட்டுமானம் - 16.9% • விநியோக கால்வாய் கட்டுமானம் - 3.5%		
2023க்கான உத்தேச திட்டம்	• அணுகு சாலை அமைத்தல் • கட்டு, மதகு, கசிவு மற்றும் வழங்கல் கால்வாய் கட்டுதல் தொடங்குதல்		
திட்டத்தின் ஒட்டுமொத்த நன்மைகள்	• அனுராதபுரம் மாவட்டத்தில் 25,000 பேருக்கு குடிநீர் விநியோகம் (குறைக்கப்பட்ட சி.கே.டி மற்றும் அதிகரித்த சுகாதாரம்) • மஹா விளச்சியா பாசனத் திட்டத்தின் பயிர்த் தீவிரத்தை 1.57ல் இருந்து 2.0 ஆக அதிகரிக்கவும். • •மனித யானை மோதல்களைக் குறைத்தல் • •வேந்தர்களால் மேலும் சேதமடையாமல் தொல்பொருள் இடங்களைப் பாதுகாத்தல் • அனுராதபுரத்தில் முன்மொழியப்பட்ட மருந்தக வலயத்திற்கு நீர் வழங்கல் • வில்பத்து தேசிய பூங்காவிற்குள் நீர் இருப்பு அதிகரிப்பு • மதரகம் ஆருவின் சுற்றுச்சூழல் ஓட்டத்தை உறுதி செய்தல் • • நிலத்தடி நீர் ரீசார்ஜிங்		

14. தெமட்டகல நீர்த்தேக்கத் திட்டம்

மதிப்பிடப்பட்ட செலவு	ரூ. . 2,230 Mn	**பயன்பெறும் மாவட்டங்கள்**	அனுராதபுரம்
நிதி மூலம்	GOSL	**நீர்த்தேக்கத் திறன்/ பாசன நிலப் பகுதி**	2.32 MCM/ 550 ஹெக்டேர்
திட்ட காலம்	03 Yeaரூ. (2021 – 2023)	**பயனாளிகள்**	1,246 குடும்பங்கள்
ஒதுக்கீடு 2022	ரூ. . 10 Mn	**2023க்கான ஒதுக்கீடு**	ரூ. . 5 Mn
ஒட்டுமொத்த நிதிசார் முன்னேற்றம்	ரூ. . 1.909 Mn	**ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் (%)**	0.25
நிதி சார் முன்னேற்றம் 2022	ரூ. . 1.653 Mn		
2022ல் நடந்த பணிகள்	• அணுகல் சாலை கட்டுமானம் - 6.8%		
2023க்கான உத்தேச திட்டம்	• RAMP முடிவின்படி நிறுத்தப்பட்டது.		
திட்டத்தின் ஒட்டுமொத்த	• • 32 கிராம குளங்களின் கீழ் 550 ஹெக்டேரில் சாகுபடி செய்து 1246		

நன்மைகள்	விவசாய குடும்பங்கள் பயனடைகின்றன. • பயிர்த் தீவிரத்தை 0.6ல் இருந்து 1.5 ஆக அதிகரிப்பது இறுதியில் விவசாய சமூகத்தின் வறுமை நிலையைக் குறைக்கும். • திட்டப் பகுதியின் ஒட்டுமொத்த மேம்பாடு (விவசாய சாலைகள், சந்தைக்கு எளிதான அணுகல்) திட்டத் தலையீடுகள் மற்றும் அதன் மூலம் சமூக-பொருளாதார நிலைமைகள், வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் மற்றும் வறுமையைக் குறைத்தல். • கஹல்ல பல்லேகல காட்டுப் பகுதியில் உள்ள வனவிலங்குகளுக்கு நீர் வழங்குதல் • குறைக்கப்பட்ட மனித - விலங்கு மோதல் • வீட்டு உபயோகத்திற்கான சுத்தமான நீர் • நிலத்தடி நீர்மட்டம் அதிகரித்தது • உலர்கிணறுகளை ரீசார்ஜ் செய்கிறது

15. உமா ஓயா கீழ்நிலை அபிவிருத்தி திட்டம்

மதிப்பிடப்பட்ட செலவு	ரூ. . 17,914.19 Mn	**பயன்பெறும் மாவட்டங்கள்**	மொனராகலை, அம்பாந்தோட்டை
நிதி மூலம்	GOSL	**நீர்த்தேக்கத் திறன்/ பாசன நிலப் பகுதி**	-6.5 MCM (அலிகொட்டா ஆர), 22.6 MCM (குடா ஓயா), -4500 ஹெக்டேர் புதிய நிலங்கள் மற்றும் 1500 ஹெக்டேர் இருக்கும் நிலங்கள்.
திட்ட காலம்	2013 - 2023	**பயனாளிகள்**	5,700 குடும்பங்கள்
ஒதுக்கீடு 2022	ரூ. . 2,060 Mn	**2023க்கான ஒதுக்கீடு**	ரூ. . 2,320 Mn
ஒட்டுமொத்த நிதிசார் முன்னேற்றம்	ரூ. 11,877.602 Mn	**ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் (%)**	74.05
நிதி சார் முன்னேற்றம் 2022	ரூ. 2,006.672 Mn		
2022ல் நடந்த பணிகள்	• குடா ஓயா நீர்த்தேக்கத்தின் கட்டுமானம் – 14.2% • ஹந்தபானகல நீர்த்தேக்கத்தில் LB கால்வாய் (11 கிமீ) நிர்மாணம் - 16.5 % • அலிகொட்டா ஆரா – குடா ஓயா இடமாற்ற கால்வாய் நிர்மாணம் – 12% • குடா ஓயா - சிங்களயகம இடமாற்ற கால்வாய் நிர்மாணம் – 14% • கிராம நீர்ப்பாசன அமைப்புகளின் வளர்ச்சி (சிறு தொட்டிகள்) - 14% • ஹந்தபனகல பிக்கப் அனிகட் – 30% • நிலம் கையகப்படுத்துதல், மீள்குடியேற்றம், உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் மறு காடு வளர்ப்பு - 1.5%		
2023க்கான உத்தேச திட்டம்	• அலிகொட்டா ஆரா, குடா ஓயா மற்றும் ஹந்தபானகல நீர்த்தேக்கங்களின் நிர்மாணப் பணிகள் எஞ்சியவை • ஹந்தபனகல நீர்த்தேக்கத்தில் LB கால்வாய் நிர்மாணத்தின் சமநிலைப் பணிகள். • அலிகொட்டா ஆரா – குடா ஓயா இடமாற்ற கால்வாய் நிர்மாணத்தின் எஞ்சிய பணிகள். • ஹந்தபனகல பிக்கப் அனிகட்டின் மீதி வேலை • நிலம் கையகப்படுத்துதல், மீள்குடியேற்றம், உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் காடுகளை வளர்ப்பது		
திட்டத்தின் ஒட்டுமொத்த நன்மைகள்	• வருடாந்த டிரான்ஸ்-பேசின் திசை திருப்புதல் 145 MCM நீர் உமா ஓயா படுகையில் இருந்து கிரிந்தி ஓயா படுகைக்கு • 4500 ஹெக்டேர் புதிய நிலங்களுக்கும், ஏற்கனவே உள்ள 1500 ஹெக்டேர் நிலங்களுக்கும் தண்ணீர் வழங்குதல். • மொனராகலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் 30எம்சிஎம் குடிநீர் மற்றும் தொழிற்சாலை நீர் வழங்கல். • கால்நடை மற்றும் உள்நாட்டு மீன்பிடி வளர்ச்சி • பல திறமையான மற்றும் திறமையற்ற பணியாளர்களுக்கான வேலை வாய்ப்புகள்		

	• நவீன தொழில்நுட்பத்தின் அறிவு பரிமாற்றம் • 54 சிறு தொட்டிகளை மேம்படுத்தி 110 தொட்டிகளுக்கு தண்ணீர் வழங்குதல்

16. ஹிம்பிலியகட வத்தேகெதர நீர்ப்பாசன உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டம்

மதிப்பிடப்பட்ட செலவு	ரூ. .7,155 Mn	**பயன்பெறும் மாவட்டங்கள்**	மாத்தளை
நிதி மூலம்	GOSL	**நீர்த்தேக்கத் திறன்/ பாசன நிலப் பகுதி**	-1.3 MCM (வத்தேகெதர தொட்டி) -1300 ஏக்கர் இருக்கும் நிலங்களும், 1010 ஏக்கர் புதிய நிலங்களும்
திட்ட காலம்	2020-2024	**பயனாளிகள்**	1,200 குடும்பங்கள்
ஒதுக்கீடு 2022	ரூ. . 271 Mn	**2023க்கான ஒதுக்கீடு**	ரூ. . 250 Mn
ஒட்டுமொத்த நிதிசார் முன்னேற்றம்	ரூ. . 398.81 Mn	**ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் (%)**	5.25
நிதி சார் முன்னேற்றம் 2022	ரூ. . 221.61 Mn		
2022ல் நடந்த பணிகள்	• வத்தேகெதர குளத்தின் கட்டுமானம் – 9 %		
2023க்கான உத்தேச திட்டம்	• வத்தேகெதர குளம் மற்றும் மதகு கட்டுதல்		
திட்டத்தின் ஒட்டுமொத்த நன்மைகள்	• வெளியேறும் ஹிம்பிலியகட குளத்தின் கொள்ளளவை அதிகரிப்பது. • 1300 ஏக்கர் புதிய பாசனப் பகுதிகளுக்கும், ஏற்கனவே உள்ள பாசனப் பகுதிகளின் 1010 ஏக்கர்களுக்கும் பாசன நீர் வழங்கல் • 1.00 முதல் 2.00 வரை பயிர் தீவிரம் அதிகரிப்பு		

17. விலகண்டி ய நீர்த்தேக்கம்

மதிப்பிடப்பட்ட செலவு	ரூ. . 298 Mn	**பயன்பெறும் மாவட்டங்கள்**	பதுளை
நிதி மூலம்	GOSL	**நீர்த்தேக்கத் திறன்/ பாசன நிலப் பகுதி**	1. 06 MCM 101 ha
திட்ட காலம்	2012-2022	**பயனாளிகள்**	250 குடும்பங்கள்
ஒதுக்கீடு 2022	ரூ. . 40 Mn	**2023க்கான ஒதுக்கீடு**	-
ஒட்டுமொத்த நிதிசார் முன்னேற்றம்	ரூ. . 272.911 Mn	**ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் (%)**	97.35
நிதி சார் முன்னேற்றம் 2022	ரூ. . 39.999 Mn		
2022ல் நடந்த பணிகள்	• பிரதான கால்வாய் மற்றும் பிரதான கால்வாயில் கட்டமைப்புகள் அமைத்தல் • பகிர்மான கால்வாய்கள் மற்றும் கட்டமைப்புகள் கட்டுமானம் • வயல் கால்வாய்கள் மற்றும் கட்டமைப்புகளை அமைத்தல்.		
2023க்கான உத்தேச திட்டம்	• அனைத்து கட்டுமான வேலைகளையும் முழுடித்தல்		
திட்டத்தின் ஒட்டுமொத்த நன்மைகள்	• 101 ஹெக்டேர் நிலத்திற்கு இரு பருவங்களிலும் சாகுபடி செய்ய பாசன நீர் வழங்குதல்.		

18. மஹகல்கமுவ குளத்தை விரிவாக்குதல்

மதிப்பிடப்பட்ட செலவு	ரூ. 500 Mn	**பயன்பெறும் மாவட்டங்கள்**	குருநாகலை
நிதி மூலம்	GOSL	**நீர்த்தேக்கத் திறன்/ பாசன**	8 MCM

		நிலப் பகுதி	566 ஹெக்டேர்
திட்ட காலம்	2014-2023	**பயனாளிகள்**	2,000 குடும்பங்கள்
ஒதுக்கீடு 2022	ரூ. 30 Mn	**2023க்கான ஒதுக்கீடு**	ரூ. 100 Mn
ஒட்டுமொத்த நிதிசார் முன்னேற்றம்	ரூ. 374.99 Mn	**ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் (%)**	93.05
நிதி சார் முன்னேற்றம் 2022	ரூ. . 13.45 Mn		
2022ல் நடந்த பணிகள்	• கட்டமைப்புகளின் கட்டுமானம் (மீதமுள்ள பணிகள் குழாய் அமைப்பு மற்றும் கடக்கும் கீழ் அமைப்பு)		
2023க்கான உத்தேச திட்டம்	• அனைத்து கட்டுமான பணிகளையும் முடித்தல்		
திட்டத்தின் ஒட்டுமொத்த நன்மைகள்	• 566 ஹெக்டேர் புதிய மற்றும் ஏற்கனவே உள்ள நிலங்களுக்கு பாசன நீர் வழங்குதல்		

நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் ஏனைய திட்டங்கள்

1. தெதுரு ஓயா நீர்த்தேக்கத் திட்டம்

மதிப்பிடப்பட்ட செலவு	**ரூ**. . 13,540 Mn	**பயன்பெறும் மாவட்டங்கள்**	**குருநாகலை புத்தளம்**
நிதி மூலம்	GOSL	**நீர்த்தேக்கத் திறன்/ பாசன நிலப் பகுதி**	75 MCM/ 10,932 **ஹெக்டேர்**
திட்ட காலம்	2005 – 2022	**பயனாளிகள்**	12,500 **குடும்பங்கள்**
ஒதுக்கீடு 2022	**ரூ**. . 50 Mn	**2023க்கான ஒதுக்கீடு**	-
ஒட்டுமொத்த நிதிசார் முன்னேற்றம்	**ரூ**. . 13,472.58 Mn	**ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் (%)**	99.9
நிதி சார் முன்னேற்றம் 2022	ரூ. . 40.73 Mn		
2022ல் நடந்த பணிகள்	நிலம் கையகப்படுத்துதல் மற்றும் இழப்பீடு - 26%		
2023க்கான உத்தேச திட்டம்	• மீதமுள்ள வேலைகளைத் தொடர்வது		
திட்டத்தின் ஒட்டுமொத்த நன்மைகள்	• 12,500 பண்ணை குடும்பங்களுக்கு 10,932 ஹெக்டேர் புதிய மற்றும் ஏற்கனவே உள்ள நிலப் பயன்களில் பாசன நீர் வழங்கல். • குருநாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்களில் 100,000 குடும்பங்களுக்கு குடிநீர் விநியோகம் • 1.5MW நீர் மின் உற்பத்தி		

இலங்கை மகாவலி அதிகார சபை (MASL)

1. இலங்கை மகாவலி அதிகார சபையினால் செயற்படுத்தப்பட்ட வண்ணமுள்ள விசேடமான நிகழ்ச்சித் திட்டங்களின் விருத்தி

1.1 வெலி ஓய ஒருங்கிணைந்த அபிவிருத்தி கருத்திட்டம்

மதிப்பீட்டு பணத் தொகை	ரூபா 3,957.10 மில்லியன்	பலனடையும் மாவட்டங்கள்	அனுராதபுரம், வவுனியா, முல்லைத்தீவு
நிதி வசதிகள் வழங்கப்படும் முறை	இலங்கை குடியரசு	நீர்த்தேக்கத்தின் கொள்திறன்	-
கருத்திட்ட காலப் பகுதி	2012 - 2023	பலனடைவோர்	5,700 குடும்பங்கள்
நிதி ஏற்பாடுகள் 2022	ரூபா 40.00 மில்லியன்	2023 க்கான நிதி ஏற்பாடுகள்	ரூபா 32.00 மில்லியன்
முழு மொத்த நிதி விருத்தி	ரூபா 2,524.39 மில்லியன்	முழு மொத்த பௌதீக விருத்தி (%)	92.50%
2022 ஆம் ஆண்டில் நிதி விருத்தி	ரூபா 37.66 மில்லியன்		
2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நிறைவு செய்யப்பட்ட பணிகள்	• பாதை நிர்மாணிப்பு மற்றும் மறு சீரமைப்பு - 30 கிலோ மீற்றர் நீளமான பாதை நிர்மாணிப்புகள் நிறைவடைந்துள்ளன. • குளங்களின் மறு சீரமைப்பு - 1 குளம் • கால்வாய்களின் மறு சீரமைப்பு - 1.5 கிலோ மீற்றர் • கட்டிடங்களின் நிர்மாணிப்பு மற்றும் மறு சீரமைப்பு - 1 கட்டிடம் • காணித் துண்டங்களின் நில அளவை - 744 காணித் துண்டங்கள் • காணி உரிமை கையளிப்பு - 1,940 காணி உரிமை கையளிப்புகளினதும், உரிமைப் பத்திரங்களினதும் தயாரிப்புகள் நிறைவடைந்துள்ளன • நிறுவன மற்றும் குடியியல் அபிவிருத்தித் திட்டங்கள் - 83 நிகழ்ச்சித் திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.		
கருத்திட்டத்தின் முழு மொத்தப் பலன்கள்	• 422 கிலோ மீற்றர் நீளமான பாதைகளின் கட்டுமானம் மற்றும் மறு சீரமைப்பு • வாய்க்கால் பாலத்திற்குக் கீழான 393 குழாய்களின் மறு சீரமைப்புப் பணிகள் • 81 கிலோ மீற்றர் நீளமான வாய்க்கால்களின் மறு சீரமைப்பு • 131 கட்டுமானங்களினதும், 1 குளத்தினதும் கட்டுமானம் மற்றும் மறு சீரமைப்புப் பணிகள் • காணித் துண்டங்களின் நில அளவை - 16,698 காணித் துண்டங்கள் • 5,412 காணி உரிமை கையளிப்புகளினதும், உரிமைப் பத்திரங்களினதும் தயாரிப்புகள் நிறைவடைந்துள்ளன • 1,498 நிறுவன மற்றும் குடியியல் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. • 140 கட்டிடங்களின் நிர்மாணிப்புப் பணிகள் மற்றும் மறு சீரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன • 5,800 விவசாயிகள் தொடர்பாக விவசாயப் பயிர்ச் செய்கை மற்றும் கால் நடை விருத்திச் சேவைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன		
2023 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சி	• தொடர்ச்சியான பணிகளை நிறைவு செய்தல் மற்றும் கருத்திட்டத்தை நிறைவடையச் செய்தல்		

1.2 ரிதீமாலியத்த ஒருங்கிணைந்த அபிவிருத்தி கருத்திட்டம்

மதிப்பீட்டு பணத் தொகை	ரூபா 1,100.00 மில்லியன்	பலனடையும் மாவட்டங்கள்	பதுளை (ரிதீமாலியத்த)
நிதி வசதிகள் வழங்கப்படும் முறை	இலங்கை குடியரசு	நீர்த்தேக்கத்தின் கொள்திறன்	-
கருத்திட்ட காலப் பகுதி	2012 - 2022	பலனடைவோர்	19,127 குடும்பங்கள்
நிதி ஏற்பாடுகள் 2022	ரூபா 40.00 மில்லியன்	2023 க்கான நிதி ஏற்பாடுகள்	
முழு மொத்த நிதி விருத்தி	ரூபா 870.57 மில்லியன்	முழு மொத்த பௌதீக விருத்தி (%)	98%
2022 ஆம் ஆண்டில் நிதி விருத்தி	ரூபா 33.99 மில்லியன்		
2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நிறைவு செய்யப்பட்ட பணிகள்	• பாதைகளின் மறு சீரமைப்பு - 18.5 கிலோ மீற்றர் நிறைவடைந்துள்ளன • இறக்குமதி செய்யப்படுகின்ற மற்றும் தடுக்கப்பட்ட பயிர்களின் பயிர்ச் செய்கை - 3,468 ஹெக்டயார் • வீட்டுத் தோட்ட விருத்தி - 17,079 தோட்டங்கள் • விவசாயிகள் / அலுவலர்களின் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் - 48 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன • நிறுவன ரீதியான மற்றும் குடியியல் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் - 25 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன • குளங்களின் மறு சீரமைப்பு - 2 குளங்கள் நிறைவடைந்துள்ளன • மர நடுகை நிகழ்ச்சித் திட்டங்கள் - 3 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன • கட்டிடங்களின் நிர்மாணிப்பு மற்றும் பராமரிப்பு - 1 கட்டிடம் நிறைவு செய்யப்பட்டுள்ளது		
கருத்திட்டத்தின் முழு மொத்தப் பலன்கள்	• 22 குளங்களின் மறு சீரமைப்பு • 1 கட்டுமானம் மறு சீரமைக்கப்பட்டுள்ளது • கால்வாய் மறு சீரமைப்பு - 72.84 கிலோ மீற்றர் • பாதை மறு சீரமைப்பு - 108.10 கிலோ மீற்றர் • 4 சாலையின் கீழான வாய்க்கால் பாலங்களின் நிர்மாணிப்பு • 43 கட்டிடங்களின் நிர்மாணிப்பு மற்றும் மறு சீரமைப்பு • இறக்குமதி செய்வதற்குத் தடை செய்யப்பட்ட பயிர்களின் பயிரிடல் - 1,508 ஹெக்டயார் • வீட்டுத் தோட்ட விருத்தி - 17,079 தோட்டங்கள் • விவசாயிகள் / அலுவலர்களின் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் - 48 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன • 2,284 சுகாதார மேம்பாட்டு வசதிகள் கையளிக்கப்பட்டுள்ளன • 310 நிறுவன ரீதியான மற்றும் குடியியல் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் • 9 மர நடுகை நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்		

1.3 ரம்பக்கன் ஓய ஒருங்கிணைந்த அபிவிருத்தி கருத்திட்டம்

மதிப்பீட்டு பணத் தொகை	ரூபா 1,086 மில்லியன்	பலனடையும் மாவட்டங்கள்	அம்பாறை (மஹஓய / பதியதலாவ)
நிதி வசதிகள் வழங்கப்படும் முறை	இலங்கை குடியரசு	நீர்த்தேக்கத்தின் கொள்திறன்	
கருத்திட்ட காலப் பகுதி	2012 - 2023	பலனடைவோர்	15,975 குடும்பங்கள்
நிதி ஏற்பாடுகள் 2022	ரூபா 60 மில்லியன்	2023 க்கான நிதி ஏற்பாடுகள்	
முழு மொத்த நிதி விருத்தி	ரூபா 706.64 மில்லியன்	முழு மொத்த பௌதீக விருத்தி (%)	86%
2022 ஆம் ஆண்டில் நிதி விருத்தி	ரூபா 46.63 மில்லியன்		
2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நிறைவு செய்யப்பட்ட பணிகள்	• இறக்குமதி செய்வதற்குத் தடை செய்யப்பட்ட பயிர்களின் பயிரிடல் - 2,084 ஹெக்டயார் • வீட்டுத் தோட்ட விருத்தி - 13,715 தோட்டங்கள் • விவசாயிகள் / அலுவலர்களின் பயிற்சி நிகழ்ச்சிகள் - 60 நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளன • பாதைகளின் மறு சீரமைப்பு - 246 கிலோ மீற்றர் நிறைவு செய்யப்பட்டுள்ளது • குளங்களின் மறு சீரமைப்பு - 3 குளங்கள் நிறைவடைந்துள்ளன • 4 கட்டிடங்களின் நிர்மாணிப்புகள் • 600 காணித் துண்டங்களின் நில அளவை செயற்பாடுகள் மற்றும் காணித் துண்டுகளின் அளவை செயற்பாடுகள் • 359 உரிமங்கள் வெளியிடப்பட்டுள்ளன • 28 காணித் துண்டங்களுக்கு நட்ட ஈடுகள் செலுத்தப்பட்டுள்ளன • நிறுவன ரீதியான மற்றும் குடியியல் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் - 78 நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளன		
கருத்திட்டத்தின் முழு மொத்தப் பலன்கள்	• இறக்குமதி செய்வதற்குத் தடை செய்யப்பட்ட பயிர்களின் பயிரிடல் - 2,084 ஹெக்டயார் • வீட்டுத் தோட்ட விருத்தி - 13,715 தோட்டங்கள் • விவசாயிகள் / அலுவலர்களின் பயிற்சி நிகழ்ச்சிகள் - 60 நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளன • பாதைகளின் மறு சீரமைப்பு - 246 கிலோ மீற்றர் நிறைவு செய்யப்பட்டுள்ளது • குளங்களின் மறு சீரமைப்பு - 3 குளங்கள் நிறைவடைந்துள்ளன • 1.925 கிலோ மீற்றர் நீளமான எப் கால்வாயினதும், டீ கால்வாயினதும், 2 அணைக்கட்டுகளினதும் மறு சீரமைப்புப் பணிகள் • 79 கட்டிடங்களின் நிர்மாணிப்புகள் மற்றும் மறு சீரமைப்புகள் • 2,264 காணித் துண்டங்களின் நில அளவை செயற்பாடுகள் மற்றும் காணித் துண்டுகளின் அளவை செயற்பாடுகள் நிறைவடைந்துள்ளன • 2,137 உரிமங்கள் வெளியிடப்பட்டுள்ளன • 568 காணித் துண்டங்களுக்கு நட்ட ஈடுகள் செலுத்தப்பட்டுள்ளன • நிறுவன ரீதியான மற்றும் குடியியல் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் - 514 நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளன		

	• 51 சிறு அளவிலான வர்த்தக நடவடிக்கைகளுக்கும், 10 நிறுவன முனைவர் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களிற்கும் சந்தை வசதிகள் வழங்கப்பட்டுள்ளன • 41 குடி மக்களுக்கு 50% ஆன பங்களிப்பில் இயந்திரங்கள் கையளிக்கப்பட்டுள்ளன • குடி நீர் வழங்கும் பொருட்டு 121 கிணறுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன • 840 சுகாதார மிக்க கழிவகற்றல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன • 10 கிலோ மீற்றர் நீளமான மின் யானை வேலிகளின் பராமரிப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன • மர நடுகை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 5,000 மரக் கன்றுகள் நடப்பட்டதுடன், சுற்றுச் சூழல் சார் 8 நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன
2023 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சி	• தொடர்ச்சியான பணிகளை நிறைவு செய்தல் மற்றும் கருத்திட்டத்தை நிறைவடையச் செய்தல்

2. இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்திப் பணிகள்

2.1 விவசாய, கால் நடை மற்றும் கடற்றொழில் செயற்பாடுகளின் விருத்தி

விவசாயத் துறையின் பிரதானமான செயற்பாடுகளின் விருத்தி

இலக்கம்	பிரதானமான உள்ளடக்கம்	இலக்கு (மெட்ரிக் தொன்) (வருடாந்தம்)	விருத்தி (மெட்ரிக் தொன்)	%
1	**விவசாய உற்பத்தி**			
1.1	**விதை - மகாவலி பண்ணைகள்**			
	விதை நெல்	2,832.6	1,611.00	57%
	ஏனைய திடல் பயிர்கள்	83.8	13.60	16%
1.2	**விதைகள் - விவசாயிகள்**			
	விதை நெல்	4,909.5	5,018.50	102%
	ஏனைய திடல் பயிர்கள்	1,232.1	1,008.20	82%
1.3	**உணவுப் பயிர் உற்பத்தி**			
	நெல்	985,547.0	723,944.00	73%
	ஏனைய திடல் பயிர்கள்			
	பெரிய வெங்காயம்	74,792.0	11,358.00	15%
	சோயா	7,227.0	8,485.90	117%
	உழுந்து	5,485.0	1,244.00	23%
	கவுபி	2,634.0	1,861.00	71%
	குரக்கன்	2,479.0	1,366.50	55%
	பயறு	10,121.0	1,319.00	24%
	சோளம்	83,417.0	20,112.00	24%
	நிலக் கடலை	8,436.0	2,388.00	28%
	மிளகாய்	64,435.0	10,140.00	16%
	எள்ளு	753.0	394.40	52%
	மஞ்சள்	5,750.0	6,820.00	119%

	இஞ்சி	3,680.0	4,680.00	127%
1.4	**பழங்கள்**			
	வாழை	182,340.0	152,230.00	83%
	பப்பாசி	57,036.0	38,970.00	68%
	கொய்யா	20,750.0	18,020.00	87%
	ஏனைய பழங்கள் (மா, டிரகன் புருட், அன்னாசி, பெஷன், இளநீர்)	35,852.0	74,337.00	207%
1.5	**மரக்கறி**	233,175.0	212,154.00	91%
2	**சேதன வலயங்களின் விருத்தி**	1,970.0	1,745.80	89%
2.1	மகாவலி வலயங்களில் சேதன உர உற்பத்தி - கொம்போஸ்ட்	304,532	27,199.00	9%

2.2 கால் நடை வளங்கள் உற்பத்தியின் விருத்தி மற்றும் கால் நடை வளங்கள் மற்றும் கடற்றொழில் பிரிவின் பிரதானமான செயற்பாடுகள்

	இலக்கு (மெட்ரிக் தொன்) வருடாந்தம்	**விருத்தி (மெட்ரிக் தொன்)**	**%**
மிருக வளர்ப்பு			
நன்னீர் மீன் (மெட்ரிக் தொன்)	14,000	14,397.70	100%
பால் (மில்லியன் லீற்றர்)	50	48.34	96%
முட்டை (மில்லியன்)	80	61.00	76%
அலங்கார மீன் (மில்லியன் சோடிகள்)	41	43.55	100%

பிரதானமான செயற்பாடுகள்	**அலகு**	**இலக்கு 2022**	**விருத்தி 31.12.2022**
பசு மாட்டு மேம்பாடு			
பண்னைத் திட்டமிடல்களை தயாரித்தல் மற்றும் பால் விவசாயிகளை பயிற்றுவித்தல்	பாற் பண்ணைக் குடும்பங்கள்	2,000	1,447
கால் நடைத் தொட்டிகள் மற்றும் உபகரணங்களை வழங்குதல்	வீடுகள் மற்றும் உபகரணங்கள்	380	420
அலங்கார மீன் வளர்ப்பு			
இனப்பெருக்க பண்ணை மேம்பாடு	விவசாயிகள்	17	12
சேற்றுக் குளங்கள் / தனிமைப்படுத்தல் குளங்களை வழங்குதல் / உட்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாடு	குடியியல்	102	97
கோழி உற்பத்தி விருத்தி			
சிறு அளவிலான பண்ணைகளை நடுத்தர அளவில் விஸ்தீரணப்படுத்துதல்		120	120
ஒரு மாத கால வயதுள்ள குட்டிகளை வழங்குதல்	விவசாயக் குடும்பங்கள்	40,536	37,692
மத்திய அளவிலான விவசாயிகளை வணிக அலகுகளாக மாற்றுதல்	நிகழ்ச்சித் திட்டங்கள்	37	37
மீன் விரலிகள்	பண்ணைகள்	32	21.31
மீன் குஞ்சுகள்	மில்லியன்	6	5.94
நன்னீர் இறால்கள்	மில்லியன்	4.00	4
வலை கூடுகளை வழங்குதல்	மில்லியன்	9	9

3. நீர்ப்பாசன செழுமை நிகழ்ச்சித் திட்டம்

குளங்களை மறு சீரமைக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் விருத்தி (2022.12.31)

வலயம்	2022 ஆம் ஆண்டு காலப் பகுதி தொடர்பில் அடையாளம் காணப்பட்ட குளங்கள்	நிதியங்கள் (ரூபா. மில்லியன்)	2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மறு சீரமைக்கப்படாத குளங்கள்	
			இலக்கு	விருத்தி
பீ	9	4.00	3	1
சீ	8	17.80	5	2
டீ	14	7.73	9	4
ஜீ	0	0	0	0
எச்	37	16.21	21	20
ஹுருலு வெவ	1	0.32	1	0
எல்	5	1.70	2	0
வலவ	5	8.97	3	1
ரம்பக்கன் ஒய	25	23.10	9	4
ஈ	7	0.20	1	0
மொத்தம்	**111**	**80.00**	**54**	**32**

4. மகாவலி முதலீட்டு வலயங்கள் மற்றும் சுற்றாடல் சார் சுற்றுலா வலய மேம்பாடு

மகாவலி முதலீட்டு கருத்திட்டங்கள் தொடர்பில் காணிகளை கையளித்தல்

பிரதானமான செயற்பாடுகள்	அலகு	வருடாந்த இலக்கு	விருத்தி 31.12.2022
முதலீட்டு கருத்திட்டங்கள் தொடர்பில் முதலீட்டாளர்களை தேர்ந்தெடுத்தல்	ஆய்வுக்கு உள்ளாக்கப்பட்ட விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை	200	165
	வெளியகற்றப்பட்ட காணிகளின் எண்ணிக்கை (ஹெக்டயார்)	100	14.58

5. நிறுவன அபிவிருத்தி பிரிவின் பிரதான செயற்பாடுகளின் விருத்தி

பிரதான உள்ளடக்கம்	இலக்கு	விருத்தி	%
தொழிற் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் (இளையோர்)	975	697	71%
மகாவலி வலயங்களில் சிறந்த விளையாட்டு வீரர்களையும், வீராங்கணைகளையும் இனங் கண்டு அவர்களை தேசிய மற்றும் சர்வதேச தர நிலைகளுக்கு கொண்டு வருதல் (விளையாட்டு வீரர் வீராங்கணைகள்)	2,050	2,264	100%
மகாவலி சவிய கடன் பிரேரணை திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறு அளவிலான தொழில் முனைவர்களுக்கு கடன் வசதிகளை வழங்குவதன் ஊடாக அவர்களினது வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்துதல் (பலனாளிகள்)	250	367	100%

6. காணிகளை வழங்குதல்

இலங்கை மகாவலி அதிகார சபையின் மூலம் காணி உரிமைகளை கையளிக்கும் விருத்தி - 2022.12.31

	வயலம்	வருடாந்த இலக்கு	விருத்தி
1	பீ	6,700	4,307
2	சீ	7,700	3,975
3	டீ	300	757
4	ஈ	100	103
5	ஜீ	1,100	1,717
6	எச்	5,600	5,330
7	எல்	5,000	1,244
8	ஹுருலு வெவ	1,600	689
9	ரம்பக்கன் ஓய	1,500	717
10	வலவ	34,800	4,559
	மொத்தம்	**64,400**	**23,398**

7. சுற்றாடல் பாதுகாப்பு

சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் விருத்தி - 2022.12.31

பிரதான உள்ளடக்கம்	அலகு	2022 இலக்கு	விருத்தி 31.12 2022
மரக் கன்று உற்பத்தி (மகாவலி நாற்றங்கால்கள், பாடசலை மாணவர்கள் மற்றும் விவசாயிகளின் ஊடாக)	மரக் கன்றுகள்	661,250	608,795
மேல் நீரேந்து பிரதேசங்கள் மற்றும் தாழ் படுக்கை பிரதேசங்களுடன் தொடர்புடைய மர நடுகை	மரக் கன்றுகள்	197,600	90,599
மேல் நீரேந்து பிரதேசங்களுடன் தொடர்புடைய மண் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம்	மீற்றர்	20,000	9,449
சுற்றாடல் சார் கல்வி மற்றும் விருத்தி	நிகழ்ச்சித் திட்டம்	101	80
சுற்றாடல் தாக்க ஆராய்ச்சி	கருத்திட்டங்கள்	5	5
மேல் நீரேந்து பிரதேசங்களைச் சார்ந்த நீரியல் தர நிலை மற்றும் நீரியல் ஆராய்ச்சி	இடங்கள்	27	27
இளைய வளர்ப்பு நடுகைக் கன்று உற்பத்தி	மரக் கன்றுகள்	370,000	29,232
யானைக்கும் மனிதனுக்குமிடையிலான மோதல்களைக் குறைத்தல் (யானை வெடிகள், எனஜைசர் போன்றவை) மற்றும் உயிரியல் வேலி பராமரிப்பு	கி. மீற்றர்	31.5	28
ஆக்கிரமிப்பு வெளி வாரி நீரியல் தாவரங்களை அகற்றுதல்	குளங்களின் எண்ணிக்கை / ஹெக்டயார்	4	4
தோட்ட அலங்கரிப்பு மற்றும் கழிவு முகாமைத்துவம்	நிகழ்ச்சித் திட்டங்கள்	3	3
பசுமை பூங்காக்களை அமைத்தல்	**பூங்காக்கள்**	12	1

நீர்ப்பாசன முகாமைத்துவ பிரிவு (IMD)

ஒருங்கிணைந்த நீர்ப்பாசன முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்தை (INMAS) செயற்படுத்தும் பொருட்டு 1984 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட நீர்ப்பாசன முகாமைத்துவ பிரிவினால் 400 ஹெக்டயாரைத் தாண்டிய 54 பாரிய நீர்ப்பாசன ஆளுகை பிரதேசங்களில் பங்குபற்றல் முகாமைத்துவ செயற்பாட்டின் கீழ் வலுவூட்டப்பட்ட வண்ணமுள்ளன. விவசாயிகளினது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதும், தன்னியக்க முகாமைத்துவம் தொடர்பில் தன்னம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட நீர்ப்பாசன குடியேற்றங்கள் தொடர்பில் வலுவான விவசாயக் குடிகளை தோற்றுவிப்பதும் இந் நிகழ்ச்சித் திட்டத்தினது தொலை நோக்காகக் காணப்படுகின்றது. விவசாய இயக்கங்கள், அரச மற்றும் தனியார்த் துறை நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்ற பங்குதாரிகளினது பங்கேற்புடனும், பங்களிப்புடனும் கூடியதாக பாரிய நீர்ப்பாசன கருத்திட்டங்களின் நீர் அலகொன்றினதும், காணி அலகொன்றினதும் வினைத் திறனை மேம்படுத்திய வண்ணம் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவத்தினூடாக விவசாயக் குடிகளினது பேண்தகு பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

பாரிய நீர்ப்பாசன ஆளுகைப் பிரதேசங்களில் சீரான முகாமைத்துவத்தை முன்னெடுப்பதன் ஊடாக உற்பத்திகளின் வினைத் திறனை மேம்படுத்தும் நோக்கில் விவசாய இயக்கங்களை நிலை நாட்டுதல், வலுப்படுத்துதல் மற்றும் இயங்கு நிலையில் அவற்றைப் பராமரித்தல், நீர்ப்பாசன உப தொகுதிகளின் பராமரிப்பு மற்றும் செயற்படுத்துகை பணிகளை மேம்படுத்துதல், விவசாய உற்பத்திகள் மற்றும் உற்பத்திகளின் வினைத் திறனை மேம்படுத்தும் நோக்கில் தேவையான வசதிகளை ஏற்படுத்துதல், அதற்கான வழி வகைகளை உறுவமைத்தல் மற்றும் ஒருங்கிணைப்பின் ஊடாக விவசாயக் குடி மக்களினது வாழ்வாதார நிலைகளை மேலுயர்த்துவதற்கு நடவடிக்கை எடுப்பதும் இப் பிரிவின் பொறுப்பாகக் காணப்படுகின்றது.

1. நோக்கு

   "பாரிய நீர்ப்பாசனம் சார்ந்த ஆரோக்கியமான விவசாயிகள் சமூகமொன்றை உருவாக்குதல்"

2. குறிக்கோள்

   "இணைந்த விவசாயிகள் சமூகமொன்றின் ஊடாக மற்றும் உள்ளீடுகள் மற்றும் சேவை வழங்கும் நிறுவனங்கள் ஒள்றிணைகப்படுவதன் ஊடாக விவசாய உற்பத்திகள் மற்றும் பாசன நீர் அலகொனறின பயன் விளவை உயர்வடையச் செய்தல்"

3. நோக்கங்கள்

   - பாசன நீர் அலகொன்றின் மற்றும் காணி அலகொன்றின் மூலம் கிடைக்கப் பெறும் பயன்களை உச்சகட்டமாக்குதல்.
   - புாசன நீர் சாதாரணமாகவும் சமமானதாகவும் விவசாயிகளிடையே பகிர்ந்தளிப்பதற்கான இலகுவான முறை.
   - நீர்ப்பாசனம் சார்ந்த வளங்கள் முகாமைத்துவத்திற்கு விவசாயிகளை சேர்த்துக் கொள்வதற்கு தேவையான தாபன ரீதியான கட்டமைப்பு தயாரித்தல்/ சக்தியுடையதாக்குதல்/ நடாத்திக் கொண்டு செல்லல்.
   - நீர்ப்பாசள அமைப்புகளில் செயற்பாடு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் சிறந்த மட்டத்தில் நடாத்திக் கொண்டு செல்வதற்காக பின்னணியை தயாரித்தல் மற்றும் இலகுவாக்குதல்.
   - பயன் பெறுவோர் மற்றும் அரசாங்கம் போன்றே தனியார் நிறுவனங்களிடையே சிறந்த ஒன்றிணைப்பின் ஊடாக விவசாய உற்பத்திகளின் விளைபயனை உயர்வடையச் செய்தல்.
   - விவசாயிகள் சமூகத்தின் அறிவு மற்றும் திறமைகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் ஆரோக்கியமான சிந்தனையை ஏற்படுத்தல்.
   - விவசாய ரீதியான உதவிச் சேவைகளை வலுவூட்டுதல்.
   - விவசாயிகள் குடும்பங்களில் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி.

2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் விருத்தி செய்யப்பட்ட நிகழ்ச்சிகள்

1. விவசாய இயக்கங்களை அதிகாரமூட்டி, வலுவூட்டுதல்

இப் பிரிவு தனது விடயப் பரப்பின் கீழான 54 பிரதானமான நீர்ப்பாசனப் பிரதேசங்களில் 899 விவசாய இயக்கங்களை நிலை நாட்டி பல்வேறு செயற்பாடுகளின் ஊடாக மிகச் சிறந்த பயன்பாட்டைப் பின்பற்றிய வண்ணம் இயைபாக்கமடைவதற்கு இட வசதிகளை ஏற்படுத்திய வண்ணம் வழிகாட்டியாகச் செயற்பட்ட வண்ணமுள்ளது.

உதாரணம் : விவசாய இயக்கங்களின் இறுதிக் கணக்குகளை தயாரித்தல் மற்றும் கணக்காய்வு வசதிகளை வழங்குதல், விவசாய இயக்கங்களின் வருடாந்த சபைக் கூட்டங்களையும், மாதாந்த சபைக் கூட்டங்களையும் நடாத்துதல், விவசாய இயக்கங்களின் விடயப் பரப்பின் கீழான குழுக்களை நிலை நாட்டுதல், மாதிரிப் பண்ணை இயக்கங்களை நிலை நாட்டுவதுடன் தொடர்புடைய வசதிகளை ஏற்பாடு செய்தல் மற்றும் நிதியங்களை அதிகரித்தல்.

2. நீர்ப்பாசன முகாமைத்துவம்

நீர் உட்பட விவசாய உபகரணங்களின் சேவைகள் குறித்த காலப் பகுதியில் வழங்கப்படுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு முன் பருவ (முன் போகம்) கூட்டங்களையும், பருவக் கூட்டங்களையும் நடாத்துவதன் மூலம் நீர்ப்பாசன முகாமைத்துவத்தை வினைத் திறன் மிக்கதாக விருத்தி செய்யும் செயற்பாட்டின் கீழ் முன்னெடுக்கப்படுகின்ற தீர்மானங்களின் விருத்தியை மேம்பார்வையிடும் மற்றும் பகுப்பாய்வு செய்யும் செயன் முறை தொடர்பான மாதாந்த கருத்திட்ட முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

அதன் பிரகாரம், 468 முகாமைத்துவ குழுக் கூட்டங்களும், 101 முன் பருவ (முன் போகம்) கூட்டங்களும், 180 பருவக் கால கூட்டங்களும் நடாத்தப்பட்டன.

3. பங்கேற்புப் பராமரிப்பு மற்றும் நீர் முகாமைத்துவ நிகழ்ச்சி

நீர்ப்பாசன முகாமைத்துவ பிரிவிற்கு உரித்தான 54 பிரதேசங்களில் பகிர்ந்தளிப்புக் கால்வாய்கள் (DC) மற்றும் திடல் கால்வாய்கள் (FC) போன்றவற்றுடன் கூட்டிணைந்த நீர்ப்பாசன உப தொகுதியின் செயற்படுத்துகையையும், பராமரிப்பையும் (O & M) தன்னியக்க முகாமைத்துவத் தொகுதியாக விவசாய இயக்கங்களினால் (FO) மாற்றம் செய்யப்பட்டுள்ளன. இச் செயற்பாடுகளை தரமுயர்ந்த அடிப்படையில் முன்னெடுக்கும் பொருட்டு விவசாய இயக்கங்களுக்கு வழிகாட்டுவதற்கும், முன்னெடுப்பிற்குமென அத்தகைய செயற் பணிகள் தொடர்பாக விவசாய இயக்கங்களின் (FO) கொள் திறனை மேம்படுத்துதல் இப் பிரிவின் பொறுப்பாகக் காணப்படுகின்றது.

அதன் பிரகாரம் கால்வாய்கள் மற்றும் பாதைகளின் இரு புறமும் புற்களை வெட்டி அகற்றுதல், விவசாயப் பாதைகளினதும், கால்வாய்களினதும் பராமரிப்புகள், தொடர்ச்சியாக பராமரிப்புத் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் மறு சீரமைத்தல், ஒதுக்கீட்டு எல்லைகளை அடையாளமிடுதல், ஒதுக்கீதுகளைப் பாதுகாக்கும் பொருட்டு 2,600 மரக் கன்றுகளும், 3,077 எல்லைக் கற்களும் நடப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

“ஸ்ரீ தலதா சிறு போக விளைச்சல் வழிபாடு - 2022” விழா 2022 ஒக்டோபர் 27 மற்றும் 28 ஆகிய நாட்களில் ஸ்ரீ தலதா மாளிகையில் 2,000 விவசாயிகள், பாரிய நீர்ப்பாசன சிபாரிசு திட்டங்களின் கீழான விவசாய இயக்கங்களின் தலைவர்கள் மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு விவசாய இயக்கங்களின் தலைவர்கள் போன்றோரின் பங்கேற்புடன் ஏழாவது வருடமாகவும் நடாத்தப்பட்டது. நீர்ப்பாசன அமைச்சரின் தலைமையிலும், நீர்ப்பாசன அமைச்சின் செயலாளரின் பங்கேற்புடனும் குறித்த நிகழ்வு நடாத்தப்படுவதற்கு இப் பிரிவு ஏற்பாடுகளை ஒழுங்கு செய்திருந்தது.

தலதா மாளிகைக்கு மேலதிகமாக பிள்ளையார் கோயில், மீரா மக்கம் பள்ளிவாசல், புனித பேதுரு பேராலயம் ஆகிய வணக்கத் தளங்களிற்கு புதிய அறுவடையை படைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டமை ”சிறு போக அறுவடை பூஜையின்” விசேட நிகழ்வாகக்

